ஜில்லா பூவர்ணனைச் சரித்திரங்கள்

# சென்னை நகர்

இது
பச்சையப்பன் கலாசாலையில் பிரதம
சரித்திராசிரியராயிருக்கும்

ஸி. எஸ். ஸ்ரீநிவாஸாச்சாரியார், எம்.ஏ.,

அவர்களால் எழுதப்பட்டது

சர்வகலாசாலை ப்ரேஸ்
...ண்ட்ரோட், மதராஸ்

ஜில்லா பூவர்ணனைச் சரித்திரங்கள்

# சென்னை நகர்

இது
பச்சையப்பன் கலாசாலையில் பிரதம
சரித்திராசிரியராயிருக்கும்


ஸி. எஸ். ஸ்ரீநிவாஸாச்சாரியார், எம்.ஏ.,

அவர்களால் எழுதப்பட்டது

ஆக்ஸ்பர்ட் சர்வகலாசாலை ப்ரேஸ்
மௌண்ட்ரோட், மதராஸ்


# கடல் அடுத்த சென்னை நகரம்

453
453



V2111
N48
97895

கூடியது



சென்னை நகர்

# FOREWORD

I HAVE been asked to write a foreword to the Madras District History which Professor C. S. Srinivasachari has brought out in easy and elegant Tamil for the use of pupils of the lower classes. I understand that this is one of a series of books which the Oxford University Press is issuing dealing with the history and the geography of various districts in the Presidency. Professor Srinivasachariar is well known for his historical research and is peculiarly fitted to bring out a production of this kind. He has been recently requested by the Corporation of Madras to render help in the publication of an official history of the City of Madras. It is hardly necessary to emphasize the need for an exact knowledge of local history and geography of the pupils of the district. It often happens that the tourist knows more of a locality than the permanent residents thereof. A local pride can legitimately be cultivated and will be induced by a detailed knowledge of the historical growth of the locality. I commend the book which Mr. Srinivasachariar has brought out and congratulate the Publishers on having secured his very valuable services in bringing out this volume.

MADRAS,
*21st May 1930.*

A. RAMASWAMI MUDALIAR,
*Member*, *Council of State and*
*President*, *Corporation of Madras.*

V2111
7130

## பொருளடக்கம்


| அத்தியாயம். | விஷயம். | பக்கம் |
|---|---|---|
| 1. | சென்னையின் இயற்கையமைப்பு ... ... ... | 1 |
| 2. | சென்னையின் சீதோஷ்ண நிலை ... ... ... | 8 |
| 3. | சென்னை நகர வருணனை ... ... ... ... | 11 |
| 4. | சென்னையிலடங்கிய ஊர்கள்... ... ... ... | 23 |
| 5. | சென்னையின் ஜனங்கள் ... ... ... ... | 28 |
| 6. | சென்னப்பட்டணம் ஏற்பட்ட வரலாறு ... ... | 34 |
| 7. | பழைய கோட்டையும் பட்டணமும் (I) ... ... | 42 |
| 8. | பழைய பட்டணம் (II) ... ... ... ... | 48 |
| 9. | சென்னையின் முன்னேற்றம் (முதற் பாகம்) ... ... | 53 |
| 10. | சென்னையின் முன்னேற்றம் (இரண்டாம் பாகம்) ... | 57 |
| 11. | சென்னையின் சரித்திரம் ... ... ... ... | 65 |
| 12. | நகரத்தின் அரசாங்க முறையும், நகர பரிபாலன சபையும் ... ... ... ... ... ... | 73 |

## சித்திரங்களும் படங்களும்

பக்கம்

1. சென்னை நகர் ... ... ... ... முகப்பு
2. மரீனாகடலோரமும் சர்வகலாசாலை மண்டபமும் ... 14
3. ராஜதானி கல்லூரி (பிரஸிடென்ஸி காலேஜ்) ... 19
4. மைலாப்பூர் கபாலீசுவரர் கோயில் ... ... ... 24
5. ஸான்தோம் கதீட்ரல் ... ... ... ... 26
6. பழைய கோட்டையும் பழைய பட்டணமும் ... ... 42
7. கலஸ மஹால் ... ... ... ... ... 65
8. கவர்னர் மாளிகையும் விருந்துகொண்டாடு மண்டபமும். 67
9. சர் தாமஸ் மன்ரோ பிரபு ... ... ... ... 68
10. சென்னை நகர் படம் ... ... ... இறுதி

அத்தியாயம் I

## சென்னையின் இயற்கையமைப்பு

சென்னை நகரம், சென்னை மாகாணத்தின் தலைநகர். சென்னை மாகாணம் பல ஜில்லாக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அந்தப் பிரிவுகளுள் சென்னையும் ஒன்று. சென்னை மிகவும் பெரிய நகரமாகும். இந்நகரில் வசிக்கும் ஜனங்களின் தொகை ஏறக்குறைய ஐந்து லட்சங்களுக்கு மேற்படும்.

சென்னை இந்தியாவிலுள்ள முக்கிய நகரங்களுள் ஒன்று. இது சுமார் ஒன்பது மைல் நீளமும், மூன்று மைல் அகலமுமாக விரிந்துள்ளது. இதன் கிழக்கில் வங்காளக் குடாக் கடல் இருக்கிறது. இதன் மற்றப் பக்கங்களில் செங்கல்பட்டு ஜில்லா சூழ்ந்திருக்கிறது. சென்னையின் நிலப்பரப்பு தாழ்ந்த சமவெளி: நகரத்தில் கடல் மட்டத்துக்கு இருபத்திரண்டு அடிக்குமேல் உயர்ந்த இடங்கள் கிடையா.

சென்னை நகருக்குள் இரண்டு சிறு நதிகள் பாய்ந்து கடலில் கலக்கின்றன. அவைகளுள் கூவம் ஆறு ஒன்று; அடையாறு மற்றொன்று. கூவம் நதி செங்கல்பட்டு ஜில்லாவிலே, காஞ்சீபுரம் தாலுகாவில், கூவம் என்ற ஏரியினின்றும் உற்பத்தியாகிறது. ஆகையால் இந்நதிக்குக் கூவம் என்று பெயர் வழங்குகிறது. இது பல கிராமங்களுக்கிடையே பாய்ந்து சென்னையை ஊடுருவிச் செல்லுகிறது. முதலில் தென்புறமாக நகரத்தில் வளைந்தோடி, அப்புறம் வடக்காகச் சென்று, பிறகு கிழக்கே திரும்பிக் கடலில்

கலக்கின்றது. நகரத்தின் பல விடங்களினின் றும் வரும் சாக்கடை நீர் இந்நதியில் வந்து வீழ்கின்றது. ஆதலால் இதில் உள்ள தண்ணீர் ஸ்நான பானத்திற்கு உபயோகப்படுவதில்லை.

அடையாறு செங்கல்பட்டு ஜில்லாவிலேயே உற்பத்தியாகிறது. சென்னையை அடுத்துள்ள ஸைதாப்பேட்டை தாலுகாவில், செம்பரம்பாக்கம் என்னும் ஊருக்கருகிலே பெரிய ஏரி ஒன்றுண்டு. அடையாறு இந்த ஏரியிலிருந்துதான் உற்பத்தியாகிறது. இந்நதி சென்னையின் தென்னெல்லை யோரமாக ஓடிக் கடலில் கலக்கிறது. ஸைதாப்பேட்டை யென்னும் ஊர்வழியாக இந்நதி சென்னையைச் சேர்ந்து, நகரத்திற்குத் தெற்கெல்லையா யிருக்கிறது. இது கடலில் கலக்குமிடத்தில் அடையாறு என்ற கிராமம் உள்ளது. இவ்வாற்றின் வடகரையில் ஆழ்வார்பேட்டை, மயிலாப்பூர், ஸான்தோம் என்கிற ஊர்கள் உள்ளன. இவ்வூர்கள் சென்னை நகரத்தைச் சேர்ந்தவைகளே.

கூவம் நதியிலும் அடையாற்றிலும் அதிகமாக நீர் ஓடுவதே யில்லை. மழைக்காலத்தில் மட்டும் அவைகளில் நீர் பெருகிப் போவதுண்டு. மற்றக் காலங்களில் ஆற்றுநீர் கடல் வரையில் பாய்ந்து நன்றாய்க் கலப்பதில்லை. இவைகளின் முகத்துவாரங்கள் அலைகளால் மோதுண்டு, மணற்றிட்டைகள் நிறைந்திருக்கின்றன. அந்த மணற்றிட்டைகளுக்கிடையே நீர் தங்கி நிற்கும்.

கூவம் நதியோடு சிற்றாறு ஒன்று கலக்கிறது. அதற்கு முன்னாளில் வடக்காறு (North River)

என்ற பெயர் வழங்கிற்று. தற்காலத்தில் அது பக்கிங்ஹாம் கால்வாயின் ஒரு பாகமாயுள்ளது. அது சென்னையின் முக்கிய பாகமாகிய ஜார்ஜ் டவுனின் மேற்குப்பக்கமாகப் பாய்ந்து, கூவம் நதியின் முகத்துவாரத்தினருகில் அதனுடன் கலக்கிறது. இந்நதியே சென்னைக் கோட்டைக்கு மேற்காகவும் செல்லுகிறது. முதலில் தெற்கு முகமாய்ச் சென்று, பிறகு ஜெனரல் ஆஸ்பத்திரியினருகில் கிழக்கு முகமாக வளைந்து சென்று, கோட்டை மைதானத்தைக் கிட்டியவுடன் தெற்கு முகமாகத் திரும்பி கூவம் நதியுடன் சேருகிறது.

இப்படி கூவம் நதி ஒருபுறமாக வளைந்தும், வடக்காறு மற்றொரு புறமாக வளைந்தும் ஓட, மத்தியிலுள்ள இடம் மூன்று பக்கங்களிலும் நீர் சூழ்ந்த இடமாயிற்று. இவ்விரு நதிகளும் ஒன்றற்கொன்று சமீபித்துப் பாயும் இடத்தில் ஒரு கால்வாய் வெட்டி இவைகளைக் கலக்கச் செய்திருக்கிறார்கள். ஆதலால் இடையிலுள்ள இடமும் நான்கு பக்கங்களிலும் நீர் சூழ்ந்ததாயிற்று. அதற்குத் தீவிடம் (Island) என்ற பெயர் வழங்கலாயிற்று. இத்தீவிடம் நகரவாசிகள் பந்து முதலியன விளையாடுவதற்கு ஏற்றதாயிருக்கிறது.

நகரத்தை ஊடுருவி தெற்கு வடக்காய் ஒரு கால்வாய் ஓடுகிறது. அதற்கு பக்கிங்ஹாம் கால்வாய் என்று பெயர். அது ஒரு வெட்டாறு. அது பல சிறு கால்வாய்கள் ஒன்றோடொன்று சேர்ந்து ஆக்கப்பட்டது; சுமார் நானூறு மைல் நீளமுள்ளது. இக்கால்வாய் நமது நகரத்தின் நடுவே வடக்காற்றின்

வழியாகவும், கூவம் நதியின் வழியாகவும் சென்று, அடையாற்றின் குறுக்கே பாய்ந்து போகிறது. இக்கால்வாய் அதிக ஆழமான தல்ல. உப்பு, மீன், விறகு, வைக்கோல், கிளிஞ்சில் முதலிய சரக்குகளின் போக்கு வரவுக்கு இது மிகவும் உதவியாக உள்ளது. சென்னைக்கு வடக்கி லிருந்து, பெரும்பாலும் இக்கால்வாயின் மூலமாகவே படகுகளில் விறகு கொண்டுவரப்படுகிறது. காற்று அனுகூலமாக அடிக்கும் நேரங்களில், படகுக்காரர் பாய்களை விரித்துப் படகுகளைச் செலுத்துவார்கள். மற்ற சமயங்களில் நீண்ட கோலைப் பூமியில் ஊன்றிப் படகுகளைத் தள்ளிக்கொண்டு செல்வார்கள்; அல்லது படகுகளைக் கயிற்றினால் கட்டி, கரையில் நின்றுகொண்டு அவைகளை இழுத்துச் செல்லுவார்கள். புகைவண்டி ஏற்படுவதற்கு முன்னே, ஜனங்கள் அதிகமாக இக்கால்வாயின் வழியாகப் பிரயாணம் செய்து வந்தார்கள்.

சென்னையிலுள்ள பார்க்கத்தக்க காட்சிகளில் கூவம் நதியும் ஒன்று. இந்நதியைக் கடந்து செல்ல, வாராவதிகள் பற்பல விடங்களில் கட்டப்பட்டுள்ளன. இவற்றுள் முக்கியமானது வில்லிங்டன் வாராவதி (Wiilingdon Bridge) யாகும். இதற்கு ஸெயின்ட் ஜார்ஜ் வராவதி யென்ற பெயர் முன்னால் வழங்கி வந்தது. கோட்டையிலிருந்து பறங்கிமலை (St. Thomas' Mount) என்னும் ஊருக்குச் செல்லும் மலைச் சாலை (Mount Road) யின் தொடக்கத்தில் இவ் வாராவதியுள்ளது.

கூவம் நதியில் சாக்கடை ஜலம் கலப்பதாலும், அதன் நீர் கடலில் கலக்காமல் தேங்கி நிற்பதாலும், ஆற்றினின்றும் ஒருவித துர்க்கந்தம் வீசுவதுண்டு. இதனால் நகரவாசிகளுக்கு அசௌகரியம் ஏற்படுகின்றது. ஆகையால் கடல் நீரை நதியில் பாய்ச்சி, நீரைத் தங்கவிடாமல் கடலில் விழும்படி துரைத்தனத்தார் ஏற்பாடு செய்து இருக்கிறார்கள். அப்படிச் செய்வதினால் நதியில் ஜலம் நிறைந்து ஓடிக் கொண்டிருக்கும். கடற்கரையிலுள்ள மணற்றிட்டைத் தன் வேகத்தால் உடைத்துக்கொண்டு, ஜலம் கடலிற் கலக்கும்.

சென்னை புல் பாங்கான பூமி. இப்பூமியில் விளையும் புல் வேர் நீண்டு பரந்துள்ளது; மெதுவானதல்ல. இலைக்கள்ளியும் இங்கு அதிகமாய் உண்டு. சென்னைக்குத் தெற்கிலும் மேற்கிலும் சில குன்றுகள் உள்ளன. அவற்றின் சாரல்கள் சிறு முட்புதர்களால் மூடப்பட்டிருக்கின்றன. நமது பட்டணத்தில் தென்னந் தோப்புகள் பலவுள்ளன. பனைமரங்களும் ஈச்சமரங்களும் ஆங்காங்கே காணப்படுகின்றன. தென்னை மரங்களினின்றும் பெரும்பாலும் கள் இறக்குகிறார்கள். கடலோரமாக சவுக்கு மரம் நன்றாக வளர்கிறது. சவுக்குத் தோப்புகள் அனேகம் சென்னையிலும் சுற்றுப்பக்கங்களிலும் உள்ளன. அரசமரமும் நிழல்வாடி மரமும் அனேக இடங்களில் செழித்திருக்கின்றன. நிழல் கொடுக்கும் இம்மாதிரியான மரங்கள் விசாலமான தெருக்களின் இருபக்கங்களிலும் வைக்கப்பட்டிருக்கின்றன.

சென்னையின் எல்லைப் பக்கங்களில் பயிர் நிலங்களைக் காணலாம். வெளிகளிலும் கிராமங்களிலும் காய் வகைகளும் வெற்றிலையும் மிகுதியாகப் பயிராக்கப்படுகின்றன. இவைகளைக் குடியானவர்கள் பட்டணத்துக்குக் கொண்டுவந்து விற்கிறார்கள். நகரத்தில் விசாலமான புற்றரைகள் அதிகமில்லை. ஆகையால் மாடுகளுக்கும் குதிரைகளுக்கும் வேண்டிய அளவு புல் அகப்படுவதில்லை. மாடுகளுக்கு வைக்கோலும் புண்ணாக்கும் தவிடுமே முக்கிய உணவாகின்றன. பனை, ஈந்து, புளி, பூவரசு முதலிய மரங்களும் அங்கங்கே வளர்கின்றன.

சென்னையிலும் சுற்றுப்பக்கங்களிலும் பூமி பெரும்பான்மையும் செழிப்பாகவே யிருக்கிறது. ஆனால் மேற்கே ஆவடியென்ற ஊருக்கருகிலும் தெற்கே பறங்கிமலைக்கருகிலும், பூமி கற்பாங்காயுள்ளது. கடற்கரையோரம் மணற்பாங்கான நிலம். ஆறுகளின் கரையில் நிலம் சேறாயுள்ளது.

சென்னைக்கு முன்னாளில் கப்பலொதுங்கும் துறைமுகம் இல்லை. இப்பொழுதுள்ள துறைமுகம் (Harbour) சுமார் ஐம்பது வருஷங்களுக்கு முன் கட்டப்பட்டது. துறைமுகம் ஏற்படுவதற்கு முன் காற்று பலமாயடித்தால், கப்பல்களுக்குச் சேதம் நேரிடுவதுண்டு. கரையோரமாக நீர் ஆழமில்லாதிருந்ததால், கப்பல்கள் கரைக்கு வெகு தூரத்திலேயே நின்றுவிட வேண்டியிருந்தது. காற்றுக் காலங்களில் கப்பல்களுக்கும் கரைக்கும் போக்குவரவு கடினமாயிருந்தது. புயலடித்தால் கப்பல்கள் கடலிலே

தள்ளிப்போய், புயலடங்கினபிறகே கரையருகில் வந்து நின்றன.

துறைமுகம் ஏற்பட்டபொழுது, கரையினின்றும் 1,000 அடி தூரத்துக்கு கடலில் இரும்புத் தூண்கள் நாட்டி அவைகளின்மீது ஒரு பாலம் கட்டினார்கள். அப்பாலம் படகுகளினின்றும் சரக்குகளை இறக்குவதற்கும் அவற்றில் ஏற்றுவதற்கும் வசதியாயிருந்தது. ஐம்பது வருஷங்களுக்குமுன் இப்பாலத்தின் இருபுறங்களிலும் (அதாவது தெற்கிலும் வடக்கிலும்) உறுதியான இரண்டு பெரிய கல்லணைகளைக் கட்டினார்கள். இவ்விரு அணைச் சுவர்களும் கடலுக்குள் வெகுதூரம் வளைந்து சென்றன. இவைகளுக்கிடையில் கப்பல்கள் புகுந்து செல்லப் போதுமான வாய் ஒன்று விடப்பட்டது. சுவர்களின் நடுவில் நீர் ஆழமாயிருக்கும்படி மணலைத் தோண்டி யெடுத்தார்கள். அதனால் கப்பல்கள் உள்ளே வந்து தங்கிச் செல்வதற்கு அனுகூலம் ஏற்பட்டது. புயற்காற்றினால் இக்கப்பல்கள் சேதமடையவில்லை. சில வருஷங்களுக்குமுன் துறைமுகத்தில் பல புதிய மாறுபாடுகள் செய்யப்பட்டன. கப்பல்கள் கரையோடு நெருங்கிவந்து நிற்கவும், சரக்குகளை அவ்விடத்திலுள்ள மேடையினின்றும் எடுக்கவும், அதில் இறக்கவும் வேண்டிய சாதனங்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். யந்திர சக்தியினாலேயே இறக்குமதியும் ஏற்றுமதியும் செய்து வருகிறார்கள். கப்பல்களைப் பழுது பார்க்க ஓரணையைப் புதிதாகக் கட்டியிருக்கிறார்கள். துறைமுகத்தில் நீர் ஆழமாயிருக்கும் பொருட்டு மணலெடுக்கும் கருவிகளையும் ஏற்

படுத்தியிருக்கிறார்கள். இவ்விதமாய் சென்னையின் துறைமுகம் மேம்பட்டு அதன் வியாபாரமும் அதிகரித்து வருகிறது.

அத்தியாயம் II

## சென்னையின் சீதோஷ்ண நிலை

சென்னை நகரம் உஷ்ணமண்டலத்திலிருக்கிறது. ஆகையால் அது வெப்பம் மிக்க இடமே. பங்குனி, சித்திரை, வைகாசி, ஆனி மாதங்களில் சூரியன் கொடூரமாய்க் காய்கின்றான். இக்காலத்தில் துரைத்தனத் தலைவராகிய கவர்னரும், உயர்தர உத்தியோகஸ்தர்களும், தனவான்களும், நீலகிரிப் பிரதேசத்திற்குப் போவார்கள். நீலகிரி மலையடர்ந்த நாடு; எப்பொழுதும் வெப்பமின்றிக் குளிர்ந்திருக்கும். அந்நாடு சென்னையினின்று சுமார் முந்நூறு மைலுக்கப்பால் உள்ளது. சித்திரையிலும் வைகாசியிலும் சூரியன் நமது தலைக்கு நேராகக் காய்வான்; வெயில் தாங்கமுடியாமல் இருக்கும். ஆடி மாதத்தில் தென் மேற்கிலிருந்து அரபிக்கடற்காற்று அடிக்கத் தொடங்கும். அக்காற்று குளிர்ச்சியானது. அது சுமார் மூன்று மாதகாலம் சென்னையில் வீசும். இம்மாதங்களில் மழை அடிக்கடி பெய்வதும் உண்டு. ஆதலால் ஆடிமாதம் முதல் வெயிலினால் உண்டாகும் கடுமை அதிகமாகத் தெரியாது.

ஐப்பசி மாதத்தில் வடக்கினின்றும் வங்காளக் குடாக்கடல் காற்று அடிக்க ஆரம்பிக்

கும். அக்காற்று மேகங்கள் நிறைந்துள்ளது. ஆதலால் அம்மாதத்திலும் கார்த்திகையிலும் சென்னையில் அதிகமாய் மழை பொழிகின்றது. இம்மழையினுல் வறண்டுபோயிருந்த குளங்களும் நீர்த்துறைகளும் நிறைந்துவிடுகின்றன.

முற்காலத்தில் சென்னையில் இரண்டு பெரிய ஏரிகள் இருந்தன. அவைகளில் ஒன்று எழும்பூரிலுள்ள ஏரி (Spur Tank); மற்ருென்று ஸைதாப்பேட்டைக் கருகிலுள்ள ஏரி (Long Tank). அவைகள் இரண்டும் தற்காலம் மண்மேடிட்டுத் தூர்ந்து போய்விட்டன.

வெப்பமான மாதங்களில் தென்றல் (அதாவது தெற்கிலிருந்து வீசும்) காற்று நன்ருய் அடிக்கும். இக்காலத்தில் கடலில் கொந்தளிப்பு அதிகம். நீர்த்துளிகள் அலைகளினின்றும் கிளம்பி, காற்றுடன் சேர்வதனுல், கடற்காற்று குளிர்ந்திருக்கும். ஆதலால் மாலை நேரத்தில், ஜனங்கள் காற்றுவாங்க கடற்கரைக்குச் சென்று, தங்கள் உடல் புழுக்கத்தைப் போக்கிக்கொள்ளுவார்கள். நடுக்கோடையில் ஒவ்வோர் சமயத்தில் மழை பெய்வதுண்டு.

சென்னையில் பருவக்காலங்களின் குணங்கள் பின் வருமாறு:—

(1) குளிர்காலம்.—மார்கழி, தை, மாசி என்ற மூன்று மாதங்களும் குளிராயிருக்கும். இம் மாதங்களில் வடக்கினின்றும் குளிரான காற்று வீசும். இதற்கு வாடை யென்று பெயர். இராக்காலத்தில் குளிர் அதிகமாயிருக்கும். இப் பருவத்தின் முன் பகுதியில் சூரியன் உதித்ததும் பனி பெய்யும். பின் பகுதியில் சூரியோதயத்திற்கு முன்னேயே பனிபெய்யும். ஆகை

யால் இப்பருவங்களுக்கு முன்பனிக் காலம், பின்பனிக் காலம் என்ற பெயர்கள் உண்டு.

(2) வேனில் அல்லது கோடை காலம்.—பங்குனி, சித்திரை, வைகாசி, ஆனி மாதங்களில் வெயில் அதிகம். கத்தரி நாட்களுக்கு முன்னுள்ள பகுதியை இளவேனிற் காலம் என்றும், பின்னுள்ள பகுதியை முதுவேனிற் காலம் என்றும் சொல்லுவார்கள். முதுவேனிற் காலத்தில் மழை ஒருவேளை பெய்வதும் உண்டு.

(3) முன் கார்காலம்.—ஆடி, ஆவணி, புரட்டாசி மாதங்களில் சொற்பம் மழை பெய்வதுண்டு. இம்மாதங்களிலே அரபிக்கடற்காற்று வீசும். இப்பருவத்தில் வெயிலின் கொடுமை குறையும்.

(4) பின் கார்காலம்.—ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் மழை அதிகமாய்ப் பெய்யும். சென்னை வாசிகளுக்கு இப்பருவத்தில் பெய்யும் மழையே மிகவும் உதவியாயிருக்கிறது. இம்மழை பெய்யாவிட்டால் சென்னையில் தண்ணீர் கிடைப்பது மிகவும் அரிதாய்விடும்.

சென்னையில் வருஷந்தோறும் சுமார் ஐம்பது அங்குல அளவுக்கே மழை பெய்கிறது. முன் கார்காலத்தில் பெய்யும் மழை பதினைந்து அங்குலமாகும். பின் கார்காலத்தில் முப்பது அங்குல மழை பொழியும். மிகுதியாயுள்ள மழை மற்றக் காலங்களில் பெய்கிறது.

சென்னையில் அடிக்கடி கடலினின்றும் புயற்காற்று அடிப்பதுண்டு. அச்சமயங்களில் கடல் கொந்தளித்தெழும்பும். அதனால் கப்பல்களுக்கும் படகுகளுக்கும் கெடுதி நேரிடும். இப்படிப்

பட்ட அபாய காலங்களில் கப்பல்களுக்குத் துறைமுகம் புகலிடமாயிருக்கிறது.

அத்தியாயம் III

## சென்னை நகர வருணனை

சென்னை நகரம் மிகவும் பெரியது. அது எவ்வாறு இப்படிப் பெரியதோர் பட்டண மாயிற்று என்பதை நாம் தெரிந்துகொள்ள வேண்டும். சென்னபட்டணத்தின் படத்தை நோக்குங்கால் அதன் எல்லைக்குள் பல சிறு ஊர்கள் அடங்கியுள்ளன என்பதை நீங்கள் அறியலாம். அவற்றுள் ஜார்ஜ் டவுன் என் பதே முக்கியமானது. அதற்கு கருப்பட்டணம் (Black Town) என்ற பெயர் முன்னால் வழங் கிற்று. இப்பெயர் அதற்கேற்பட்ட காரணத்தை நீங்கள் பின்னால் அறிவீர்கள். சென்னை நகரில் அடங்கியுள்ள மற்ற ஊர்கள்: மயிலாப்பூர், திரு வல்லிக்கேணி, இராயபேட்டை, எழும்பூர், புரசைபாக்கம், பிரம்பூர், வண்ணாரப்பேட்டை, இராயபுரம் முதலியன. இவைகளைச்சுற்றி முற் காலத்தில் வெளியிடங்கள் பரந்துகிடந்தன. நாளாவட்டத்தில் அவ்விடங்களில் ஜனங்கள் குடியேறினர்.

சென்னையின் வடமேற்கில் பெரிய வெட்ட வெளி ஒன்றுண்டு. இது பக்கிங்ஹாம் கால் வாய்க்கு மேற்கிலுள்ளது. இவ்விடம் தாழ்ந் துள்ளபடியால் மழை பெய்தால் நீர் தங்கிநிற் கும். ஆகையால் இது வீடுகள் கட்டவாவது, பூந்தோட்டங்கள் அமைக்கவாவது உதவாது.

இதற்கருகில் பெரிய நெசவுத் தொழிற்சாலைகள் (Cotton Mills) ஏற்பட்டுள்ளன. இச்சாலைகளில் ஆயிரக்கணக்கான வேலையாட்கள் கூலிவேலை செய்து ஜீவனம் செய்கிறார்கள்.

சென்னையின் வடமேற்கிலுள்ள பிரம்பூரில், புகைவண்டிக் கம்பெனியாரின் தொழிற்சாலை (Railway Workshop) ஒன்றுள்ளது. அங்கே புகைவண்டித்தொடரில் பூட்டப்படும் பிரயாணி வண்டிகளையும், சரக்குகளை யேற்றிச்செல்லும் வண்டிகளையும் செய்கிறார்கள். சென்னையி லிருந்து பிரம்பூருக்குப்போகும் ரயில்பாதையில், பேஸின் பிரிட்ஜ் என்ற ரயில் ஸ்டேஷன் உள்ளது. இதனருகில் மின்சாரச் சக்தியை யுண்டாக்கும் ஒரு பெரிய யந்திரசாலை உண்டு. நகரத்திலுள்ள மின்சார விளக்குகள் எரிவதற் கும், விசிறிகள் சுற்றுவதற்கும் தேவையான மின்சாரச் சக்தியை இச்சாலையில் உண்டாக்கு கிறார்கள்.

மின்சாரச் சக்தியின் உதவியாலே நகர வீதி களில் ஓடும் டிராம் வண்டிகள் செல்லுகின்றன. இவைகளுக்குப் போதுமான சக்தியை, டிராம் வண்டி கம்பெனியார், எழும்பூரிலுள்ள மற் றொரு யந்திரசாலையில் உண்டுபண்ணுகிறார்கள். மின்சாரச்சக்தி, பூமியின்கீழ் புதைக்கப்பட் டுள்ள கம்பிகளின் மூலமாகவும், டிராம் வண்டி கள் ஓடும் பாதைகளின் மேலே தொங்கும் கம்பி கள் மூலமாகவும் செல்லுகிறது. இச்சக்தியி னால் நகரத்திற்கு அனேக நன்மைகள் விளை கின்றன.

நகரத்தின் இடையிடையே பல நந்த வனங்களும் மைதானங்களும் விரவியிருக்கின்

றன. ஜார்ஜ் டவுனுக்கு மேற்கில் ஒரு பெருந் தோட்டம் இருக்கிறது. அதற்கு பீபில்ஸ் பார்க் (ஜனங்கள் நந்தவனம்) என்று பெயர். அதனுள் மிருக சாலையொன்று இருக்கிறது. அச்சாலையில் சிங்கம், புலி, கரடி, கல்யானை முதலிய மிருகங்களையும், தீக்கோழி முதலிய பறவை வர்க்கங்களையும் வளர்த்து வருகிறார்கள். மாலைப் பொழுதிலும், விடுமுறை நாட்களிலும், அநேக ஜனங்கள் இச்சாலையைக்கண்டு களிப்பார்கள். இந்நந்தவனத்தில் நீர் நிறைந்த குளங்கள் சில வுள்ளன. அவற்றுள் ஒன்று சக்கர வடிவமாயுள்ளது. அவற்றுள் ஜனங்கள் சிறு படகுகளிலேறி அவைகளைத் தாங்களே ஓட்டி, உல்லாசமாய்க் காலங் கழிப்பார்கள். இந்த நந்தவனத்தில் வாரந்தோறும் சங்கீதம் நடைபெறும்.


ஜார்ஜ் டவுனிலேயே, ஜனநெருக்கமான சில விடங்களில் சிறிய பூந்தோட்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. சிந்தாதிரிப் பேட்டையையடுத்து கூவம் நதிக்கரையில் ஒரு பெரிய நந்தவனம் இருக்கிறது. அதற்கு சென்னையில் சில காலத்துக்குமுன் கவர்னராயிருந்த நேபியர் பிரபுவின் பெயரால் நேபியர் வனம் (Napier Park) என்று பெயரிட்டிருக்கிறார்கள். ஜார்ஜ் டவுனுக்கு வடக்காயும், இராயபுரத்திற்கு மேற்கிலும் ராபின்ஸன் பார்க் என்ற பெரிய தோட்டம் ஒன்றுண்டு.

பெரிய மைதானங்கள் கோட்டையை யடுத்தும், சேப்பாக்கத்திலும், மற்றுஞ் சிலவிடங்களிலுமுள்ளன. இவைகள் ஜனங்கள் உலாவுவதற்கும், விளையாடுவதற்கும் வேடிக்கைக் காட்

சிகளைக் காட்டுவதற்கும் உபயோகமாயிருக்கின்றன. இவைகளுள் கோட்டைக்கு மேற்கேயுள்ள தீவு மைதானம் (Island Ground) மிகவும் பெரியது. இவ்வெளியில் விளையாட்டுப் பந்தயங்களும், மற்ற வேடிக்கைகளும் நடைபெற்று வருகின்றன.

சென்னையிலே இரு மருங்கிலும் மரங்கள் நிறைந்த சாலைகள் பல வுள்ளன. கோட்டையினின்றும் தீவு மைதானத்தின் வழியே மலைச் சாலை செல்லுமிடத்தில் ஒவ்வொரு பக்கத்திலும் மூன்று வரிசையாய் நாட்டப்பட்டுள்ள மரங்கள் உள்ளன. மோப்ரே சாலை (Mowbray Road) இருமருங்கும் மரங்களடர்ந்து மிகவும் அழகு வாய்ந்தது. அது இராயபேட்டையினின்றும் அடையாற்றங்கரைக்குப் போகிறது.

சென்னைக் கடலோரம் மிகவும் விசாலமானது. துறைமுகத்திலிருந்து தெற்கே அடையாற்றின் முகத்துவாரத்தளவும் கரை மணல் நிறைந்து வெண்மயமாக இருக்கிறது. கடலோரமாகவே கோட்டையினின்று ஸான் தோம் வரையிலும் போகும் பெரிய சாலை யொன்றுண்டு. அதற்கு மரீனா (The Marina) என்று பெயர். அது மிகவும் விசாலமானது. அதன் கிழக்குப் பக்கத்தில் கால்டிப் பாதையும், அதற்கப்பால் பூஞ்செடிகளும் மரங்களும் அமைக்கப்பட்டுள்ளன. இச்சாலையின் மேற்கில் அழகிய மாளிகைகளும் அவைகள் அமைந்துள்ள தோட்டங்களும் உள்ளன. இவ்வீதியிலும் அருகேயுள்ள மணற்பாங்கிலும் ஜனங்கள் மாலை வேளையில் வந்து கூடுவார்கள். தனவான்களும் பிரபுக்களும் மோட்டார் வண்டிகளிலும்



மரீனு கடலோரமும் சர்வகலாசாலை மண்டபமும்

குதிரை வண்டிகளிலும் ஏறி, வீதியின் வழியாகச் சவாரி செய்வார்கள். காற்று வாங்கும் பொருட்டு அனேகர் மணற்பாங்கில் தங்குவார்கள். வீதியோரத்தில் நாட்டப்பட்டிருக்கும் அழகிய மின்சார விளக்குகள் இரவில் பிரகாசத்துடன் விளங்கும். இக்கடற்கரைக் காட்சி, மாலை வேளையில், காண்பவரின் மனதைக் கவருந் தன்மையுள்ளது. விசாலமான கடற்கரையிருப்பதனால் நகரத்துக்கு உண்டாகும் நன்மையும் பெருமையும் கொஞ்சமல்ல.

பொழுது போக்குக்கான இடங்கள் நகரத்தில் அனேகம் உள்ளன. கிளப்புகளில் பலர் ஒன்றுகூடிப் பேசிக் காலங் கழிப்பார்கள். இப்பழக்கத்தை ஐரோப்பியர்களிடம் கைக்கொண்டு இந்தியர்களும் அனுசரித்து வருகிறார்கள். நாடகசாலைகள் பல உண்டு. ஆனால் சிறந்த நாடகக் கட்டடங்கள் அதிகமாயில்லை. எழும்பூரிலே நூதனப் பொருட்காட்சி சாலை (Museum) யைச் சேர்ந்த நாடக அரங்கம் (Museum Theatre) இவற்றுள் மிகவும் சிறந்தது. விக்டோரியா ஹாலில் அனேக நாடகங்கள் நடைபெற்று வருகின்றன. சென்னையிலே ஸினிமா (Cinema) என்ற காட்சிப் படங்களைக் காட்டும் இடங்கள் பலவுள்ளன. இவற்றில் படங்கள் காட்சிகளை எதிரில் நடப்பதுபோலக் காட்டுகின்றன. இந்தக் காட்சிகளின் மூலமாகச் சிறுவர் சிறுமிகளுக்குப் பலவித உண்மைகளைக் கற்பிக்கலாம்.

நகரத்தில் முன்னாலிருந்த பரந்த வெளிகளிலெல்லாம் ஜனங்கள் குடியேறுகின்றனர். முன்னமேயே கிராமங்களாயிருந்த திருவல்லிக்கேணி, மைலாப்பூர், ஸான்தோம், எழும்பூர்

முதலியன ஜனநெருக்கமுள்ளனவாயின. வெளியிடங்களில் நுங்கம்பாக்கம், அடையாறு, சிந்தாதிரிப்பேட்டை, வண்ணாரப்பேட்டை, கீழ்ப்பாக்கம் முதலிய புது கிராமங்கள் தோன்றின. நாளாவட்டத்தில் இப்படித் தோன்றிய ஊர்கள் சென்னப்பட்டணத்துடன் சேர்க்கப்பட்டு அதன் அபிவிர்த்திக்கு முக்கிய காரணமாயின.

சென்னையின் எல்லைக்குள் குடியேறத்தக்க விசாலமான வெளிகள் இனி வேறில்லை. ஆனால் ஜனத்தொகை அதிகப்பட்டுக் கொண்டே வருதலால், அக்கம் பக்கங்களிலுள்ள கிராமங்களில் குடிகள் வீடுகள் கட்டிக் கொண்டு வாழ்வாராயினர். இவ்விதமாய் சைதாப்பேட்டையிலும், அதனருகிலுள்ள மாம்பலம் என்னும் கிராமத்திலும், பிரம்பூருக் கடுத்த வில்லிவாக்கத்திலும், சென்னைக்கு வடக்கேயுள்ள திருவொற்றியூரிலும், ஜனங்கள் அதிகமாய்க் குடியேறி வருகிறார்கள். இவ்வூர்களுக்கும் சென்னைக்கும் புகைவண்டி, மோட்டார்வண்டிப் போக்குவரவுண்டு. இச்சாதனங்களால் அவ்வூர்களினின்றும் ஜனங்கள் பகலில் சென்னைக்குச் சென்று, தங்கள் வேலைகளை முடித்துக்கொண்டு, மாலையில் தங்கள் வீடுகளுக்குத் திரும்பலாம். சில மாதங்களுக்கு முன்னே மாம்பலத்தையும் நகரத்துடன் சேர்த்துவிட்டார்கள். இப்படி மாம்பலத்திலுள்ளவர்களும் பட்டணத்திலுள்ள சௌகரியங்களைப் பெறுவாராயினர்.

இப்படி நகரத்தின் எல்லை பெருகுகிறது; அதைச் சார்ந்த ஊர்களும் விசாலித்து வருகின்றன. இப்படிப் புதிதாய் ஏற்படும் கிராமங்

களில் தெருக்களும், வீடுகளும் ஒழுங்காயும் நெருக்கமின்றியும் அமைக்கப்படவேண்டும். நீர்ப்போக்குக்குரிய சாக்கடைகளும் ஒழுங்காயிருத்தல்வேண்டும். மேலும் சுகாதாரத்திற்கும் தேகப்பயிற்சிக்கும் அவசியமாயுள்ள மைதானங்களும், விளையாட்டிடங்களும் நந்தவனங்களும் சீராய் ஏற்படவேண்டும். சென்னையில் பலவிடங்களில் விரவியிருக்கும் ஏழைக் குடிகள் வசிக்கும் சேரிகளையும் சீர்ப்படுத்தவேண்டும். இவ்விஷயங்களையெல்லாம் நகர பரிபாலன சபை (Municipal Corporation) யாரும் நகரச் சீர்திருத்தச் சபை (City Improvement Trust) யாரும் கவனித்து வருகின்றனர்.

செங்கல்லே சென்னையில் பெரும்பாலும் வீடுகள் கட்ட உபயோகப்படுகிறது. செங்கற் கட்டடங்களின் சுவர்களுக்குச் சுண்ணாம்பு பூசுவது வழக்கம். சுண்ணாம்பு மழையில் பாசி பிடிக்குமாகையால் அடிக்கடி சுவர்களுக்கு வெள்ளையடிக்க வேண்டும். சுண்ணாம்பை நன்றாய்ப்பூசி, சுவர்களைச் சலவைக் கல்லைப்போல் பளபளப்பாகச் செய்கிறார்கள். கருங்கல்லாற் கட்டப்பட்ட மாளிகைகளும், மண்டபங்களும் நகரத்தில் அனேகம் இருக்கின்றன. அவைகளுள் பல இந்துக்களின் கோயில்களே.


நகரத்தில் உள்ள பெரிய கட்டடங்களுள் பெருந் தபால் ஆபீஸ் (General Post Office), கவர்ன்மெண்ட் பாங்கி (Imperial Bank), நாஷனல் பாங்கி (National Bank) ஆகிய இவை துறைமுகத்தருகேயுள்ள வீதியில் உள்ளன. இவற்றிற்குத் தெற்கே, கோட்டை மைதானத்தில் உயர்தர நியாயஸ்தல மண்டபம் (High Court

Buildings) இருக்கிறது. இக்கட்டடத்தின்மேல் அனேக சிறு கோபுரங்கள் விளங்குகின்றன. இதன் நடுவிலுள்ள பெரிய கோபுரத்தின் சிகரத்தில் ஒரு பிரகாசமான எரிவிளக்குக்கூண்டு (Light House) அமைக்கப்பட்டிருக்கிறது. இரவில் இவ்விளக்கு சுற்றிச்சுற்றிப் பிரகாசத்துடன் ஒளி வீசுவதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். நியாயஸ்தலத்துக்குக் கிழக்கில் கருங்கல்லாற் கட்டியுள்ள பழைய எரிவிளக்குக்கூண்டு (Old Light House) உள்ளது.

நியாயஸ்தலத்தின் மேற்கே சட்டக் கல்லூரி (Law College) இருக்கிறது. இக்கல்லூரியின் வாயிற்புறத்தில் இரண்டு பெரிய கோபுரங்கள் பொலிந்து விளங்குகின்றன.

ஜார்ஜ் கோட்டை (Fort St. George) நியாயஸ்தலத்துக்குச் சற்று தெற்காயுள்ளது. இதைச் சுற்றி வெட்டப்பட்ட அகழி இன்னும் இருக்கிறது. அகழிக்கு வெளியே உயர்ந்த புற்றரை வெளியுள்ளது. கோட்டையின் கொத்தளங்களும், பீரங்கி மேடைகளும், உறுதியான மதில்களும் நன்ருய் அமைக்கப்பட்டுள்ளன. கோட்டையின் கீழ்ப்புறத்தில் புதிதாயமைக்கப்பட்டுள்ள சட்ட சபை மண்டபம் (Legislative Council Building) மிகவும் அழகானது. கோட்டைக்குள் பல வீதிகளும் கட்டடங்களும் உள்ளன. அங்கு ஒரு கிறிஸ்தவக் கோயிலும் உண்டு. கோட்டையின் வரலாற்றையும் அதன் கட்டடங்களின் விவரத்தையும் நீங்கள் பின்னுல் படிப்பீர்கள்.

சர்வகலாசாலை மண்டபம் (University Senate House) கூவம் நதியின் தெற்கில் கடலோரமாய்



ராஜதானி கல்லூரி (பிரஸிடென்ஸி காலேஜ்)

அமைந்துள்ள ஒரு பெரிய கட்டடம். இம் மாளிகையில்தான் பி. ஏ. முதலிய உயர்தர பரீக்ஷைகளில் தேர்ந்தவர்கள் பட்டம் பெறுவார்கள். இதன்மீது நான்கு அழகான கோரிகள் அமைந்துள்ளன. இக்கட்டடத்திற்குத் தெற்கில் கடலோரமாய், வருவாய் ஆபீஸ் (Board of Revenue), ராஜதானிக்கல்லூரி (Presidency College), மேரிராணிக் கலாசாலை (Queen Mary's College) முதலிய அழகான கட்டடங்கள் உள்ளன. வருவாய் ஆபீஸ் முன்காலத்தில் கர்னாடகநவாபின் அரண்மனையாய் இருந்தது. இதன் வரலாற்றை நீங்கள் பின் தெரிந்துகொள்வீர்கள். இக்கட்டடத்தின் மேற்கே, கூவம் நதிக்கரையோரமாக, அரசாங்க மாளிகை (Govenment House) யும், ராஜசபை மண்டபமும் (Banqueting Hali) அமையப்பட்டுள்ளன. இம்மாளிகையில் தான் நமது ராஜதானியின் தலைவராகிய கனம் கவர்னர் பிரபு வாசம் செய்கிறுர்; அவர் இடும் விருந்துகளும், கூட்டும் சபைகளும் சபாமண்டபத்தில் நடைபெறுகின்றன. கவர்னர் வசிப்பதற்கென்று, ஸைதாப்பேட்டைக்கடுத்த கிண்டியென்னும் கிராமத்தில் ஒரு பெரிய வசதியுமிருக்கிறது.

எழும்பூரிலேயுள்ள நூதனப்பொருட்காட்சிசாலையும் (Museum), அதையடுத்த புத்தகசாலை (Connemara Library) யும், நாடகமண்டபமும் அழகான கட்டடங்கள். மலைச்சாலையில் ஸேன்ட் ஜார்ஜ் கதீட்ரல் என்னப்பட்ட ஒரு பெரிய கிறிஸ்தவக்கோயில் உள்ளது; அது மிகவும் அழகான கட்டடம்.

அடையாற்றின் தென்புறத்தில் பிரம ஞானக்கூட்டத்தா (Theosophical Society) ரின் விடுதிகளும் மண்டபங்களும், மரங்களடர்ந்த தோட்டங்களுக்கிடையே விளங்குகின்றன. கோட்டை மைதானத்துக்கு மேற்கில் ஜெனரல் ஆஸ்பத்திரியும், அதற்கெதிரேயுள்ள ரேயில் ஆபீஸும், மத்திய ரேயில் ஸ்டேஷனும் (Central Railway Station), பெரிய கட்டடங்கள். பீபில்ஸ் பார்க்கின் தென்புறத்தில் நகர பரிபாலன சபையின் காரியாலயம் (Municipal Office, Ripon Buildings) கட்டப்பட்டுள்ளது. அதற்கருகே விக்டோரியா ஹால் என்ற மண்டபமும், கடைகள் நிறைந்த வர்த்தக சாலை (Moore Market) யும் அழகு வாய்ந்து அமைந்திருக்கின்றன.

இவைதவிர, நகரில் வேறு சிறந்த கட்டடங்கள் ஆங்காங்கு விரவியிருக்கின்றன. கிறிஸ்தவ ஆலயங்களுள் சில மிகப் பெரியவை. அவற்றுள் ஸான்தோமிலுள்ள கதோலிக் பெரிய கோயிலும், எழும்பூர் ரெயில் ஸ்டேஷனருகிலுள்ள கோயிலும் (St. Andrew's Church) முக்கியமானவை. சென்னப்பட்டணத்திலுள்ள கிறிஸ்தவ ஆலயங்களுள் மிகவும் பழமையானது மயிலாப்பூருக்கு மேற்கேயுள்ள லஸ் கோயில் (Luz Church). ஸான்தோமிலுள்ள பெரிய கோயில் கதோலிக் வகுப்பைச்சார்ந்த கிறிஸ்தவர்களால் அதிகமாய்ப் போற்றப்படுகிறது. அக்கோயிலில் அர்ச. தோமையர் (St. Thomas) என்ற பெரிய கிறிஸ்தவ சமய குருவின் சமாதியுள்ளது. கோட்டைக்குள்ளிருக்கும் கிறிஸ்தவ கோயி (St. Mary's Church) லில் சில பிரபலமான ஆங்கிலேயர்களை அடக்கஞ்செய்

திருக்கிருர்கள். அரமனைக்காரர் (Armenian) வீதியில் இரண்டு கிறிஸ்தவக் கோயில்கள் இருக்கின்றன. அரமனைக்காரர் கிறிஸ்தவர்களுள் ஒரு பிரிவினர். அவர்கள் முற்காலத்தில் சென்னையில் குடியேறி வியாபாரம் செய்தனர். அவர்களிருந்த தெருவுக்கு அரமனைக்காரர் வீதியென்ற பெயர் வழங்கலாயிற்று. இத்தெருவிலுள்ள கோயில்களில் ஒன்றை அவர்கள் கட்டிவைத்தார்கள். எழும்பூரிலும் புரசைப்பாக்கத்திலும், ஜார்ஜ் டவுனிலும், இராயபுரத்திலும் பல கிறிஸ்தவக் கோயில்கள் உள்ளன. அவற்றுள் சில கதோலிக் என்னும் வகுப்பாரைச் சேர்ந்தவை; மற்றவை பிராடஸ்டண்ட் எனப்பட்ட வகுப்புகளைச் சேர்ந்தவை.

மகம்மதியர் கடவுளைத் தொழும் கட்டடத்திற்கு மசூதியென்று பெயர். சென்னையில் பல மசூதிகள் உள்ளன. திருவல்லிக்கேணியிலிருக்கும் பெரிய மசூதி (Wallajah Mosque) அவற்றுள் சிறந்தது. அதை மகம்மது அலி வாலாஜா என்ற கர்னடக நவாபு கட்டிவைத்தான். மகம்மதிய மகான்கள் அடக்கஞ்செய்யப்பட்ட இடங்களிலும் ஜனங்கள் வந்து தொழுவதுண்டு.

இந்து ஆலயங்களுள் முக்கியமானவை மயிலாப்பூரிலுள்ள கபாலீசுவரர் கோயிலும், திருவல்லிக்கேணியிலுள்ள பார்த்தஸாரதி ஸ்வாமி கோயிலும், ஜார்ஜ் டவுனில் உள்ள பட்டணங் கோயில் என்று வழங்கும் சென்ன கேசவப் பெருமாள் கோயிலுமே. பட்டணங் கோயிலில் சிவபெருமானின் ஸந்நிதியும் உண்டு. தங்க சாலைத் தெருவிலுள்ள ஏகாம்பரேசுவரர் கோயிலும், அரமனைக்காரர் தெருவில் கச்சாலீசுவரர்

கோயிலும், குஜிலிக்கடைகளருகிலுள்ள கந்தஸ்வாமி கோயிலும் சிறப்புடன் விளங்குகின்றன. இவைகளல்லாமல் சிறிய கோயில்கள் பலவுண்டு. இக்கோயில்களில் திருவிழாக்கள் நன்கு நடைபெற்று வருகின்றன.

சென்னைக்கு வடக்கேயுள்ள திருவொற்றியூர் சிறந்த சிவஸ்தலமாகும். தென்மேற்கில் பறங்கிமலையென்ற ஊரில் மலையுச்சியில் பெயர் பெற்ற கிறிஸ்தவக்கோயில் உள்ளது. இவ்விரு ஊர்களும் செங்கல்பட்டு ஜில்லாவினுள் அடங்கியிருந்தாலும், சென்னையைச் சார்ந்தவையேயாகும்.

நகரத்திலுள்ள முக்கியமான விடங்களில் பல உருவச்சிலைகள் நிறுவப்பட்டிருக்கின்றன. நமது ஜார்ஜ் சக்ரவர்த்தியின் பாட்டியாராகிய விக்டோரியா மஹாராணியின் உருவச்சிலை சர்வகலாசாலை மண்டபத்தருகில் இருக்கின்றது. இம்மஹாராணிக்குப்பின் அரசாண்ட எட்வர்டு சக்ரவர்த்தியின் சிலை, மலைச்சாலையில் அரசாங்கமாளிகையின் முன் வைக்கப்பட்டுள்ளது. முற்காலத்தில் சென்னை கவர்னராயிருந்த மன்ரோ பிரபுவின் சிலை, குதிரையின்மீது சவாரிசெய்யும் பாவனையாக, ஒரு உயர்ந்த மேடையின்மீது மலைச்சாலையின் தொடக்கத்தில் அமைக்கப்பட்டுள்ளது. ஜார்ஜ் டவுனில் கிறிஸ்தவக் கல்லூரி (Christian College)க் கெதிரில் அதன் தலைவராயிருந்த மில்லர் துரையின் சிலை நாட்டப்பட்டிருக்கிறது. முத்துஸ்வாமி ஐயர் என்னும் நியாயாதிபதியின் சிலையும், பாஷியம் ஐயங்கார் என்னும் பெயர் பெற்ற வக்கீலின் சிலையும் நியாயஸ்தல மண்டபத்தில் உள்ளன. மற்றுமுள்ள உருவச்சிலை

கள், சில இந்திய கனவான்களுடையவும், சில ஐரோப்பியர்களுடையவுமானவை. ஜார்ஜ் சக்ர வர்த்தியின் சிலை, பச்சையப்பன் கல்லூரி (Pachaiyappa's College) க் கருகில் வீதிகள் கூடுமிடத்து நாட்டப்பட்டிருக்கிறது.

அத்தியாயம் IV

## சென்னையிலடங்கிய ஊர்கள்


சென்னையிலடங்கிய ஊர்களுள் மயிலாப் பூரும் திருவல்லிக்கேணியும் முக்கியமானவை. இவ்விரண்டும் மிகப் பழமைவாய்ந்தவை. மயி லாப்பூரில் ஒரு பெரிய சிவன் கோயில் உண் டென்று உங்களுக்குத் தெரியும். இக்கோயிலைப் புகழ்ந்து தேவாரப் பதிகம் பாடப்பட்டுள்ளது. சைவ சமயத்தைத் தென்னிந்தியாவில் நிலை நிறுத்தினவர், அப்பர், ஸம்பந்தமூர்த்தி, சுந்தர மூர்த்தி, மாணிக்கவாசகர் என்ற நால்வர். இவர் கள் சிவபெருமானைப் புகழ்ந்து பாடிய பாக் களே தேவாரம், திருவாசகம் எனப்படும் நூல் கள். மயிலாப்பூர் கபாலீசுவர ஸ்வாமியின் மகிமையைப் புகழ்ந்து இப்பெரியோர்கள் பாடி யிருத்தலால், இவ்வூர் பாடல் பெற்ற ஸ்தலம் என்று சொல்லப்படுகிறது. இங்குள்ள கோயி லில் வருஷந்தோறும் நடக்கும் உற்சவங்களில் அறுபத்துமூவர் விழா என்றொன்றுண்டு. அவ் விழா அறுபத்துமூன்று நாயன்மார்களாகிய பெரிய சிவபக்தர்களைக்கொண்டாடுவதற்கு நடப்பதாகும்.

கபாலீசுவரர் கோயிலுக்குள்ளே திருக்குறள் என்னும் அரிய தமிழ்நூலைச் செய்தருளிய திருவள்ளுவர் என்ற தெய்வப் புலவருடைய ஸந்நிதானமும் இருக்கிறது. திருவள்ளுவர் தம்மாயுளில் கொஞ்சகாலம் மயிலாப்பூரில் கழித்தார். அவ்வையார் என்கிற பெரியவளும் இக்கோயிலில் பூசிக்கப்படுகிருள்.

மயிலாப்பூர் என்ற பெயர் இவ்வூருக்கு வழங்கிவருவதற்கு ஒரு கதையுண்டு. ஒருகால் சிவபெருமானின் சக்தியாகிய பார்வதி பிராட்டியார் மயில் வேடங்கொண்டு இங்கு வந்து சிவபிரானைக் குறித்துத் தவஞ்செய்தார். ஆதலால் இதற்கு மயிலாப்பூர் என்ற பெயர் உண்டாயிற்றும்.

கோயிலுக்கு மேற்கே ஒரு பெரிய குளம் இருக்கிறது. அது நான்குபக்கங்களிலும் ஒழுங்கான கற்படிகள் கட்டப்பட்டு நடுவில் நீராழி மண்டபம் அமைக்கப்பெற்றுள்ளது. இப்பொழுது இராக்காலங்களில் குளத்தைச் சுற்றியும், நீராழி மண்டபத்திலும் பிரகாசமான மின்சார விளக்குகள் எறிந்துகொண்டுவருகின்றன. குளத்தைச் சுற்றிப் பெரிய மாடவீதிகள் உள்ளன.

முற்காலத்தில் மயிலாப்பூர் ஸான்தோமைச் சேர்ந்திருந்தது; அப்பொழுது போர்த்துக்கீசர், மகம்மதியர் முதலியவர் ஆட்சியின் கீழ் இருந்தது. இவ்விரண்டு ஊர்களையும் கர்னடகநவாப் ஆங்கிலேயருக்கு கி. பி. 1749-ம் வருஷம், இனமாகக்கொடுத்தான். நாளாவட்டத்தில் மயிலாப்பூர் அபிவிருத்தியடைந்தது. அங்கு அனேக உத்தியோகஸ்தர்களும் செல்வர்களும் வசித்துவருகிருர்கள்.



மைலாப்பூர் கபாலீசுவரர் கோயில்


திருவல்லிக்கேணி கோட்டைக்கும் மயிலாப்பூருக்கும் இடையிலுள்ளது. அதன் கோயிலிலுள்ள ஸ்வாமிக்குப் பார்த்தஸாரதிப் பெருமாள் என்று பெயர். இக்கோயிலின் மகிமையைப் பற்றி விஷ்ணுபக்தர்களாகிய ஆழ்வார்கள் பாடியிருக்கிறார்கள். திருமங்கையாழ்வார் பாடின பெரிய திருமொழியில் இக்கோயிலின் வரலாறு காணப்படுகிறது. சுமார் 1,200 வருஷங்களுக்கு முன்னமே இக்கோயில் கட்டப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. தமிழ்நாட்டை யாண்டுவந்த பல்லவர், சோழர், பாண்டியர் முதலிய அரசர்களும், பின்பு தென்னிந்தியா முழுவதையும் ஆண்ட விஜயநகரத்தரசர்களும் இக்கோயிலைப் போற்றி வந்தார்கள். மகம்மதியர்காலத்தில் இக்கோயிலுக்கு அனேக துன்பங்கள் நேர்ந்தன. சென்னப்பட்டண முண்டான சில வருஷங்களுக்குள் இது ஆங்கிலேயர் வசப்பட்டது.

கோயிலுக்கு முன்னால் இருக்கும் குளத்திற்குப் புஷ்கரிணி என்று பெயர். அதில் அல்லிப் புஷ்பங்கள் வளர்ந்ததினால், ஊருக்குத் திருவல்லிக்கேணி (திரு+அல்லி+கேணி) என்ற பெயர் வழங்கலாயிற்றாம். இப்பதத்திற்கு அழகிய அல்லிப் புஷ்பங்களையுடைய குளம் என்பது பொருளாகும். கோயில் புராதனமானதால் அனேக பழைய கல்வெட்டுகள் (inscriptions on stone) அங்குள்ளன.

திருவல்லிக்கேணி கடற்கரையை யொட்டியுள்ளது; மிகவும் ஜன நெருக்கமானது. இதைச் சுற்றிப் பல புதிய ஊர்களும் சேரிகளும் ஏற்பட்டிருக்கின்றன.

மயிலாப்பூரின் கிழக்கேயுள்ள ஸான்தோமும் ஒரு பழைய பட்டணமாகும். அது சுமார் நானூறு வருஷங்களுக்கு முன் போர்த்துக்கீசர் (ஐரோப்பியருள் ஒரு வகுப்பினர்) வசம் வந்தது. இவர்கள் ஆங்கிலேயர் இந்தியாவுக்கு வருவதற்கு முன்னால் நாட்டில் தங்கள் வியாபாரத்தினாலும் பலத்தினாலும் மேன்மை யடைந்திருந்தனர். கி. பி. 1522-ம் வருஷம் போர்த்துக்கீசர் இவ்விடத்தில் குடியேறி ஒரு கோட்டையைக் கட்டினார்கள். இவ்விடத்தில்தான், 1900 வருஷங்களுக்கு முன்னமேயே அர்ச. தோமையர் (Saint Thomas) என்னும் ஒரு கிறிஸ்தவ மஹானுபாவர் வந்து தமது மதத்தைப் போதித்துப் பிரசித்திபெற்றார் என்றுசொல்லுவார்கள். அர்ச. தோமையர் இயேசுநாதனின் பிரதம சீடர்களுள் ஒருவர் ; கிறிஸ்தவ மதப் பிரசாரர்களுள் மேம்பட்டவர்; கிறிஸ்தவ மதத்தைப் பாரஸீக தேசத்திலும் இந்தியாவிலும் ஏற்படுத்தியவர். இவர் சில காலம் இங்கு தங்கி பிறகு இந்துக்களால் உபத்திரவிக்கப்பட்டு, பறங்கிமலையில் கொல்லப்பட்டார் என்று கிறிஸ்தவர்கள் சொல்லுகிறார்கள். இப்பெரியவரின் நாமத்தை யொட்டியே இவ்வூருக்கு ஸான்தோம் என்ற பெயர்வந்தது.

பிரெஞ்சுக்காரரும் (French) டச்சுக்காரரும் (Dutch) போர்த்துக்கீசரிடமிருந்து ஸான்தோமைப் பிடுங்கிக்கொள்ள எவ்வளவோ முயன்றார்கள். இவ்விரு தேசத்தவரும், ஆங்கிலேயர், போர்த்துக்கீசரைப் போலவே இந்தியாவுக்கு வியாபாரநிமித்தம் வந்தவர்கள். கடைசியாக மகம்மதியரின் உதவியைக்கொண்டு போர்த்துக்கீசரை அவ்வூரினின்றும் துரத்திவிட்டார்கள்.



ஸான்தோம் கதீட்ரல்

மகம்மதியரும் ஸான்தோம் கோட்டையை இடித்துவிட்டனர். பிறகு இவ்வூரும் மயிலாப்பூரும் ஆங்கிலேயர் வசம் வந்தன.

ஆங்கிலேயர் சென்னப்பட்டணத்தை ஸ்தாபித்தது முதல், பலர் ஸான்தோமிலிருந்து சென்னைக்கு வந்து குடியேறலானார்கள். அதனால் ஸான்தோமின் அபிவிருத்தி குன்றிற்று. ஸான்தோமிலுள்ள கோட்டையை இடித்துவிடும்படி பலதடவை ஆங்கிலேயர் முயன்றார்கள். அப்பொழுதுதான் தாங்கள் சென்னையில் ஒரு பயமுமின்றி வாழலாமென்று நினைத்தார்கள். ஆகவே மகம்மதியரால் கோட்டை இடிபடவே ஆங்கிலேயருக்கு வெகு சந்தோஷமுண்டாயிற்று.

ஸான்தோமில் கிறிஸ்தவர்கள் அதிகமாய் வசிக்கிறார்கள். அவர்களுள் பெரும்பாலோர் கதோலிக் மார்க்கத்தைச் சேர்ந்தவர்கள். இவ்வூரில் கிறிஸ்தவக்கோயில்கள் பல வுள்ளன. இவற்றுள் பெரியதாகிய ஸான்தோம் கதீட்ரல் அர்ச. தோமையர் காலத்திலேயே ஏற்பட்டதென்று சிலர் நம்புகிறார்கள். அப்பெருமானை இக்கோயிலிலேயே அடக்கஞ் செய்திருக்கிறார்களாம். கோயிலின் ஒரு புறத்தில் அவர் சமாதிக் கட்டடம் உள்ளது.

பறங்கிமலை (St. Thomas' Mount) ஸைதாப்பேட்டைக்கருகில் உள்ளது. இதில் அனேக ஐரோப்பியரும் சட்டைக்காரரும் (Eurasians) வசித்ததினால் பறங்கியர் (Feringhis) வசிக்கும் ஊர் என்று வழங்கலாயிற்று. அர்ச. தோமையர் இந்துக்களின் உபத்திரவம் தாங்காது, உயிர் தப்ப, இவ்வூரின் மருங்கிலுள்ள மலைக்கு ஓடினாராம். அப்பெருமான் கடவுளைப் பறங்கிமலையி

னடியிலும் உச்சியிலும் தொழுததினால், அவ்விடங்களில் கிறிஸ்தவர்கள் கோயில்களைக் கட்டிக்கொண்டார்கள். மலைமேலுள்ள கோயில் அதிகப் பெருமையுள்ளது. பறங்கிமலை தேக சௌக்கியத்திற்கேற்ற ஊர். துரைத்தனத்தாரும் பட்டாளங்களிலுள்ள சிப்பாய்கள் வசிக்க இவ்வூரிலும் அதன் பக்கத்திலுள்ள பல்லாவரத்திலும் பெரிய விடுதிகளை யேற்படுத்தியிருக்கிறார்கள். பறங்கிமலையும் திருவொற்றியூரும் செங்கல்பட்டு ஜில்லாவைச் சேர்ந்தனவாகிலும், சென்னை நகரத்தைச் சார்ந்தவைகளே யென்று சொல்லலாம்.

## அத்தியாயம் V

## சென்னையின் ஜனங்கள்

துரைத்தனத்தார் பத்து வருஷங்களுக்கு ஒருமுறை ஒவ்வோர் ஊரிலும் உள்ள குடி ஜனங்களின் தொகை எவ்வளவு என்று கணக்கிடுவார்கள். அத்தொகையில் ஆண்பிள்ளைகள் எத்தனை பேர் என்றும் பெண்கள் எத்தனை பேரென்றும் கணக்கிட்டு, ஒவ்வொருவரின் பாஷை, மதம், ஜாதி, தொழில் முதலியனவற்றைக் குறிப்பார்கள். இவைகளெல்லாவற்றையும் விவரமாக ஒரு புத்தக வடிவில் அரசாங்கத்தார் வெளியிடுவார்கள். இவ்விளம்பரம் குடி ஜனக் கௌமுதி (Peoples' Census) எனப்படும். 1921-ம் வருஷம் சென்னையைப்பற்றிக் குடி ஜனக்கௌமுதியைத் தயார்செய்தார்கள். 1931ம்

வருஷம் புதிய கௌமுதிக்காக ஜனங்களைக் கணக்கிடுவார்கள்.

சென்னை நகரத்தை முப்பது பிரிவுகளாக நகர பரிபாலன சபையார் பிரிவிட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு பிரிவிலுமுள்ள ஜனத்தொகையைக் கணக்கிட்டால் ஜார்ஜ் டவுனிலுள்ள பிரிவுகளில்தான் ஜனநெருக்கம் அதிகமாக இருக்கும். இவ்வூரில் ஒரு சதுரமைல் விஸ்தீரணத்தில் சுமார் லட்சம் பேர்கள் வசிக்கிறார்கள். கோட்டையிலும் சேப்பாக்கத்திலும் வசிக்கும் ஜனங்களின் தொகை மிகவும் குறைவே. இப்பாகங்களில் உத்தியோக சாலைகள் பல இருப்பதினால் ஜனங்கள் குடியிருக்கும் வீடுகள் அதிகமாயில்லை. நுங்கம்பாக்கம், வேப்பேரி, அடையாறு, கீழ்ப்பாக்கம் முதலிய விடங்களிலும் ஜனத்தொகை மிகவும் குறைவே. இப்பாகங்களில் விசாலமான தோட்டங்களும் பங்களாக்களும் அதிகம். ஆகையால் ஜனநெருக்கமுள்ள வீடுகளும் வீதிகளும் அதிகமாய் இல்லை. திருவல்லிக்கேணி, சிந்தாதிரிப்பேட்டை, வண்ணாரப்பேட்டை முதலியவிடங்களில் ஜனநெருக்கம் அதிகம். பிரம்பூரிலும் சூளையிலும் பெரிய தொழிற்சாலைகள் உள்ளபடியால் அவ்வூர்களில் தொழிலாளர்களின் தொகை அதிகம்.

சென்னையின் ஜனத்தொகை சுமார் ஐந்தேகால் லட்சமாகும். இவர்களுள் ஆண்மக்களே பெண்பிள்ளைகளைக்காட்டிலும் சிறிது அதிகமாயுள்ளார்கள். ஜனங்கள் ஆயிரம் பெயர்களுக்குச் சுமார் எண்ணூறு பெயர்கள் இந்துக்களே; நூற்றுப்பதினைந்து மகம்மதியர்களும், எண்பது கிறிஸ்தவர்களும் உள்ளார்கள். பார்ஸி ஜாதியார்,

யூதர்கள் முதலிய அன்னியர்கள் சொற்பமே. நகரத்தில் ஏறக்குறைய ஐயாயிரம் ஐரோப்பியர்களும், பன்னிரண்டாயிரம் பறங்கிக்காரர்களும் வசிக்கிறார்கள்.

மகம்மதியர்கள் பெரும்பாலும் திருவல்லிக்கேணியிலும் இராயபேட்டையிலும் வசித்து வருகிறார்கள். கர்னாடக நவாப் சென்னையில் வெகுகாலம் வசித்துவந்தான். அவன் சந்ததியாரும், பரிவாரங்களும், படைகளும் சென்னையிலேயே வாழ்ந்துவருகிறார்கள். மற்ற ஜில்லாக்களைவிட சென்னையில் வசிக்கும் கிறிஸ்தவரின் தொகையும், மகம்மதியரின் தொகையும் அதிகம்.

இலங்கை, சிங்கப்பூர் முதலியவிடங்களுக்கு, கூலியாட்களாகவும் பிறதொழில் செய்வதற்காகவும் கப்பல் மார்க்கமாகச் செல்லப் பலர் சென்னைக்கு வருகிறார்கள். அவர்கள் சென்னைக்கே திரும்புகிறார்கள். உள் நாடுகளிலிருந்து பலர் வியாபார வியவகார விஷயங்களின்பொருட்டும், ஜனவரிப் பண்டிகைக் காலத்தில் நடக்கும் கொண்டாட்டங்களின்பொருட்டும் சென்னைக்கு வருகிறார்கள். மேலும் நகரத்திலுள்ள பல கல்லூரிகளில் படிப்பதற்காக, ஆயிரக்கணக்கான மாணவர்கள் இவ்விடத்தில் வசித்துவருகிறார்கள். சீனா, ஜப்பான் முதலிய தூரதேசங்களினின்றும் சிலர் வியாபாரநிமித்தமாக இங்கு வந்துள்ளார்கள்.

இந்துக்களில் தமிழரும் தெலுங்கருமே முக்கிய வகுப்பினராவர். தங்களுக்குள்ளே பல வேறு ஜாதிபேதமுள்ளவர்கள். தமிழர்களே குடிஜனங்களில் பாதிக்கு மேலானவர். அவர்

களுள் பிராமணர், வேளாளர், கைக்கோளர், வன்னியர் ஆகிய ஜாதியார்களே அதிகமானவர். செட்டிமார்களும் விசேஷித்து இருக்கிறார்கள். தெலுங்கர்களுக்குள் பிராமணர், வைசியர் (கோமுட்டிகள்), பலிஜர், தேவாங்கர் முதலிய ஜாதிகளே பிரதானமானவர்கள். சுமார் 100 ஜனங்களுள், 6 பிராமணர்களேயுள்ளார்கள். மலையாள நாட்டவர்களும், கன்னடம், கூர்ஜ்ஜரம், மஹாராஷ்டிரம் முதலிய பாஷைகளைப் பேசுகின்றவர்களும் அனேகர் சென்னையில் குடியேறியுள்ளார்கள். மலையாளத்தினர் பெரும்பாலும் உத்தியோகஸ்தர்களாகவும் பணியாட்களாகவும் அமைந்துள்ளார்கள். கூர்ஜ்ஜர நாட்டினின்றும் குடியேறினவர்களுள் பலர் வியாபாரஞ் செய்துவருகிறார்கள். அவர்களுள் பெரும்பாலர் வைசியரே. ராஜபுதனத்திலிருந்துவந்த மார்வாடி ஜாதியார் வியாபாரம்செய்தும் வட்டிக்குப் பணம்கொடுத்தும் ஜீவனம் செய்கிறார்கள். இவர்களுள் ஒரு வகுப்பினர் ஜைன மதத்தைச் சார்ந்தவர்கள். கூர்ஜ்ஜரர்களும் மார்வாடிகளும் ஜார்ஜ் டவுனில் ஒரு பாகமாகிய ஸாவுகார்பேட்டையில் குடியேறியிருக்கிறார்கள். நெசவுத்தொழில் செய்பவர்களுள் முக்கியமானவர்கள் பட்டுநூல்காரர்களும் சேணியர்களுமே.

ஜனங்களுள் சிலர் உத்தியோகங்களில் அமர்ந்திருக்கிறார்கள். வர்த்தகம் செய்பவர் சிலர்; நியாயவாதி (vakil) களாக இருப்பவர் சிலர்; வைத்தியர்கள், லேக்கியர்கள் (clerks), உபாத்தியாயர்கள் முதலியவர்களும் சிலரே. கூலியாட்களாகவும் பிற கடினத் தொழில்களைச்

செய்தும் வயிறு வளர்ப்பவர்கள் பலர். தன வந்தர்களாகச் சுகஜீவனம் செய்வோரின் தொகை மிகவும் சொற்பமே.

துறைமுகத்தில் அனேக சாதனங்கள் புதிதாய் ஏற்பட்டிருப்பதால், கப்பல்கள் அதிகமாய் வந்துபோகின்றன. நகரத்தினின்றும் இருப்புப்பாதைகள் தெற்கே தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி முதலியவிடங்களுக்கும், வடக்கே கல்கத்தாவுக்கும், வடமேற்கே கடப்பை, பம்பாய்க்கும், மேற்கே பங்களூருக்கும், கோயமுத்தூர், நீலகிரி, மலையாளம் முதலியவிடங்களுக்கும் செல்கின்றன. இரண்டு பெரிய கம்பெனிகள் இவ்விருப்பாதைகளை நிர்வகித்து வருகின்றன. மதருஸ் தென் மராட்டிய ரெயில்வே கம்பனியார் வடக்காகவும் வடமேற்காகவும் மேற்காகவும் செல்லும் பாதைகளை நிர்வகித்தும், தென்னிந்தியா ரெயில்வே கம்பனியார், தெற்கே போகும் பாதையை கவனித்தும் வருகிறார்கள். மதருஸ் தென்மராட்டிய ரெயில்வே கம்பெனியாரின் பெரிய ஸ்டேஷனுக்கு ஸெண்ட்ரல் ஸ்டேஷனென்று பெயர். தென்னிந்தியா ரெயில்வே ஸ்டேஷன் எழும்பூரிலிருக்கிறது. வியாபாரிகள் சரக்குகளை இவ்விருப்புப்பாதைகள் வழியாக உள்நாட்டிற் கெடுத்துப்போயும் அங்கிருந்து கொண்டும் வருகிறார்கள். ஐரோப்பாவினின்றும் ஜப்பான் முதலிய தேசங்களினின்றும் துணி, நூல் முதலிய சரக்குகள் ஏராளமாய் வருகின்றன. இரும்புச்சாமான்கள், தண்டவாளங்கள், யந்திரங்கள் முதலியனவும், மண்ணெண்ணெயும் சென்னைக்கே பெரும்பாலும் அனுப்பப்பட்டு, இங்கிருந்து நாட்டில் பல

விடங்களுக்கும் கொண்டுபோகப்படுகின்றன. சென்னையினின்றும் முக்கியமாய் பருத்திப்பஞ்சு, பதனிடாத்தோல், வேர்க்கடலை, நீலம் முதலிய சரக்குகளை அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள்.

சென்னையில் நகரபரிபாலன சபையார், பிறப்பவர், இறப்பவர் கணக்கை வெகு ஒழுங்குடன் பதிந்துகொண்டு வருகிறார்கள். பிறப்பவரின் தொகையும் இறப்பவரின் தொகையும் நகரத்தில் அதிகமே. ஜுரம், வாந்திபேதி, வைசூரி முதலிய வியாதிகளினால் வருஷந்தோறும் பலர் மரிக்கிறார்கள். வாந்திபேதி முதலிய தொத்து வியாதிகள் பரவாவண்ணம் நகரபரிபாலன சபையார் பல முயற்சிகளைச் செய்து ஜாக்கிரதை யெடுத்துக்கொண் டிருக்கிறார்கள். ஏழை ஜனங்களுக்கென்று ஏற்பட்ட தர்மசாலைகள் சென்னையில் சில வுள்ளன. சில ஜாதியார், தங்கள் இனத்தார்களில் வறுமையால் வருந்துவோருக்கு உணவும் உடையும் அளிக்கும்பொருட்டு தர்மங்களையேற்படுத்தி யிருக்கிறார்கள். பிச்சைக்காரருக்கு அன்னமிடும் சத்திரங்கள் (அன்னதான ஸமாஜங்கள்) சில விருக்கின்றன. ஆனாலும் வீதிகளிலும் சந்திகளிலும் பிச்சைக்காரர்கள் போவோர் வருவோரைத் தொந்தரவுசெய்து யாசித்துவருகிறார்கள். இவர்களுள் வேலைசெய்யச் சக்தியுள்ளவர்களை வேலைக்கு எடுத்துக்கொள்ள ஏற்பாடுகள் நடைபெறவேண்டும். குருடு, முடம், ஊனம் முதலிய பார்தைகளால் வருந்தும் அனாதைகளை நகரபரிபாலன சங்கத்தாரும், அரசாங்கத்தாரும், பொதுப்பணத்தைக்கொண்டு உணவிட்டு ஆத

ரிக்கவேண்டும். தொத்துவியாதிகளால் வருந்துவோரைப் பிரத்தியேகப்படுத்தி அவர்களுக்கேற்ற சிகிச்சை செய்ய பிரத்தியேக ஆஸ்பத்திரிகள் ஏற்பட்டிருக்கின்றன. குதிரை மாடு முதலிய மிருகங்களை ஆதரிப்பதற்கென்றும் தர்மங்களும் நகரத்தில் நடைபெற்றுவருகின்றன.

## அத்தியாயம் VI

## சென்னப்பட்டணம் ஏற்பட்ட வரலாறு

நமது நகரம் சுமார் முந்நூறு வருஷங்களுக்கு முன் ஸ்தாபிக்கப்பட்டது. அக்காலத்தில் ஆங்கிலேயர் இந்தியாவுக்கு வர்த்தகம் செய்வதற்காக வந்தார்கள். ஆங்கிலேயரைப் போலவே, மற்ற ஐரோப்பிய தேசத்தவர்களாகிய போர்த்துக்கீசரும், டச்சுக்காரரும், பின்னர் பிரெஞ்சுக்காரரும், வியாபார நிமித்தம் இந்தியாவில் குடியேறினார்கள். கிருஷ்ணா நதியின் முகத்துவாரத்தினருகிலுள்ள மசூலிப்பட்டணம் அக்காலத்தில் ஒரு பெரிய துறைமுகமாயிருந்தது. இங்கே போர்த்துக்கீசரும், ஆங்கிலேயரும், டச்சுக்காரரும் தங்கள் தங்களுக்குத் தனியே வர்த்தகசாலைகளை யேற்படுத்திக்கொண்டு ஒருவருடன் ஒருவர் போட்டியுடன் வியாபாரம் செய்தனர். ஆங்கிலேயருக்கு இப்போட்டியினால் அதிக லாபம் கிடைக்கவில்லை.

சில வருஷங்களுக்குப் பிறகு ஆங்கிலேயர் மசூலிப்பட்டணத்தினின்றும் விலகி, தெற்கே கடலோரமாகச் சென்று, துகராஜபட்டணம் என்னும் பெயருள்ள ஊரை யடைந்தனர். இது

பழவேற்காட்டுக்குச் சுமார் 40 மைல் தூரத்திலுள்ளது; நெல்லூர் ஜில்லாவிலிருக்கிறது. பழவேற்காட்டில், டச்சுக்காரர்கள் தங்களுக்குரிய பண்டக சாலையொன்றைக் கட்டிக்கொண்டு வாழ்ந்தனர். டச்சுக்காரர் துகராஜபட்டணத்திற்கு வந்த ஆங்கிலேய வர்த்தகருடன் போட்டியிட்டு, அவர்களை வியாபாரத்தில் தலையெடுக்காது செய்தனர். அதனால் ஆங்கிலேயர் துகராஜபட்டணத்தை விட்டகன்றனர். அவர்களுள் சிலர் மறுபடியும் மசூலிப்பட்டணத்திற்கே திரும்பினர். மற்றுஞ் சிலர் தெற்கே சென்று ஸான்தோமையணுகினர். அவ்விடத்திலிருந்த போர்த்துக்கிசரும், பறங்கிக்காரரும் ஆங்கிலேயரை உற்சாகத்துடன் வரவேற்றனர். அவ்விடத்திலேயே ஆங்கிலேயர் ஒரு வர்த்தக சாலையை யேற்படுத்திக்கொண்டிருக்கலாம். ஆனாலும் அவர்கள் கூவம் நதியின் முகத்துவாரத்தின் வடக்கிலுள்ள ஒரு புதிய இடத்தைத் தெரிந்தெடுத்தார்கள். அவ்விடத்தில் ஒருவருடைய போட்டியுமின்றி வாழலாம் என்று எண்ணினர்போலும்!

இப்படிச் சென்னப்பட்டணத்தை தங்களுடைய வாசஸ்தலமாகத் தெரிந்தெடுத்த ஆங்கிலேய வர்த்தகர்களுடைய தலைவனுக்கு டே (Day) என்று பெயர். சென்னையும் அதைச் சுற்றியிருந்த பிரதேசமும் சந்திரகிரி யரசனுக்குட்பட்டிருந்தன. இவ்வரசனுடைய முன்னோர்கள் விஜயநகரம் என்ற ஒரு பெரும் ஸாம்ராஜ்யத்தை வெகுகாலம் சிறப்புடன் ஆண்டு வந்தனர். இவ்வரசனுடைய அதிகாரத்தின் கீழ் ஒரு தலைவன் சென்னையின் பக்கத்திலுள்ள

பூந்தமல்லி என்னுமிடத்தில் ஆட்சிசெய்தான். டே இத்தலைவனுடன் சினேகம் பாராட்டி, அவனிடமிருந்து ஆங்கிலேயர் வசிப்பதற்கு ஒரு இடமும் அவ்விடத்தில் ஒரு கோட்டையைக் கட்டிக்கொள்ளுவதற்கு அனுமதியும் பெற்றான். இப்படி கி. பி. 1639-ம் வருஷம் சென்னப்பட்டணம் ஸ்தாபிக்கப்பட்டது. இது கூவம் நதிக்கு வடக்கே, கடலோரமாக மூன்று மைல் நீளமும் ஒரு மைல் அகலமுங்கொண்டது. இதன் மேற்கெல்லையாக வடக்காறு என்ற சிற்றாறு இருந்தது. ஆங்கிலேயருக்குக் கிடைத்த ஸ்தலம் செழிப்பில்லாதது; சதுப்பானது. ஆனால் டே இக்குறையைப் பாராட்டாது நிலம் கிடைத்ததேயென்று மிகவும் சந்தோஷித்தான். உடனே மதில் சூழ்ந்த ஒரு பண்டகசாலையைக் கட்ட ஆரம்பித்தான். இது ஒரு வருஷகாலத்தில் கட்டி முடிக்கப்பெற்றது. இப்பண்டகசாலையே சென்னையின் முதற் கோட்டையாகும். ஒரு பெரிய கிறிஸ்தவமத மஹான் பெயரால் ஸேயின்ட் ஜார்ஜ் கோட்டையென்று இதற்குப் பெயர் வழங்கலாயிற்று. அப்பெரியவர் பிறந்த நாளில் கோட்டை முற்றுப்பெற்றபடியால் அது அவ்வாறு பெயரிடப்பட்டதாம். டே கோட்டை கட்டுவதற்காக அதிகமாகப் பணம் செலவிட்டான். இங்கிலாந்திலுள்ள மேலதிகாரிகள் டே வீண்செலவு செய்தானென்று அவன்மீது குற்றஞ் சாட்டினார்கள்.

கோட்டை மதிலின் நான்கு மூலைகளிலும் நான்கு சிறு கோபுரங்கள் இருந்தன; சுற்றிலும் கொத்தளங்களுமிருந்தன. கோட்டையின் மத்தியிலிருந்த பண்டகசாலை (Factory House)

யிலேயே ஆங்கிலேய வர்த்தகர்களெல்லோரும் தங்களுடைய சரக்குகளுடன் வசித்து வந்தார்கள். கோட்டையின் வடக்கே இந்து ஜனங்கள் குடியேறி ஒரு சிறிய பட்டணத்தை யேற்படுத்திக்கொண்டார்கள். இப்பட்டணத்துக்கு சிலர் மதருஸ் பட்டணம் என்று பெயர் வழங்கினார்கள்; மற்றவர் சென்னப்பட்டணம் என்று பெயரிட்டார்கள். சென்னப்பன் என்பவன் சந்திரகிரி யரசன் கீழ் அதிகாரம் செலுத்தின நாயக்கன் ஒருவனுடைய தகப்பன். அந்த நாயக்கன் ஆங்கிலேயர்களுக்குச் சென்னப்பட்டணத்தைக்கொடுத்தவன். ஆகையால் இவன் தந்தையின் பெயரே பட்டணத்துக்கு வழங்கலாயிற்று.

கோட்டைக்கருகில் முன்னால் ஒரு செம்படவச்சேரி இருந்தது. அதற்கு மதறஸன் என்னும் கிறிஸ்தவன் தலைவனாக இருந்தான். அவன் பட்டணத்தைத் தன் பெயரால் அழைக்கும்படி டே துரையை வேண்டிக்கொண்டானாம். ஆதலால் ஊருக்கு மதருஸ் பட்டணம் என்று பெயர் வழங்கலாயிற்று என்று சிலர் சொல்லுகிறார்கள். சிலர் மற்றொரு காரணத்தைச் சொல்லுகின்றனர்: மதீருஸ் (Madeiros) என்ற பெயர்கொண்ட போர்த்துக்கீச வர்த்தகன் ஸான்தோமில் பிரபலமாய் வாழ்ந்துவந்தான். அவனுடைய உறவினரும் சந்ததியார்களும் பலர் இவ்வூரில் வாழ்ந்ததினால் அவனுடைய குடிப் பெயரே இப்பட்டணத்துக்கு இடப்பட்டது என்கிறார்கள்.

சந்திரகிரி யரசனுக்கு ஸ்ரீரங்கராயர் என்று பெயர். தன் பெயரையே இவ்வூருக்கு வழங்கி

இதை ஸ்ரீரங்கராய பட்டணம் என்றழைக்க வேண்டுமென்று அவன் விரும்பினான். ஆனால் அவன் விருப்பம் நிலைக்கவில்லை. ஜனங்கள் இவ்வூரைச் சென்னபட்டணம் என்றும் மதராஸ் என்றுமே அழைக்கலானார்கள். ஆங்கிலேயர் ஆரம்பத்திலிருந்தே மதராஸ் என்னும் பெயரையே வழங்கிவந்தார்கள்.

கோட்டைக்குள் ஐரோப்பியரும் பறங்கிக்காரருமே வசித்துவந்தனர். ஆதலால் அதற்கு வெள்ளையர் பட்டணம் (White Town) என்று பெயர் வந்தது. கோட்டைக்கப்பால் இந்தியர் வசித்துவந்த பேட்டைக்கு கரும் பட்டணம் (Black Town) என்றும் இந்து நகரம் (Gentoo Town) என்றும் பெயர் வந்தது.

கோட்டைக்குள் கட்டப்பட்ட வீடுகளெல்லாம் உறுதியானவை. வீடுகளின் கீழறைகளில் வியாபாரச் சரக்குகள் சேகரித்து வைக்கப்பட்டன. மேலறைகளில் ஐரோப்பிய வர்த்தகர்கள் வாசஞ் செய்துவந்தார்கள். இவ்வறைகளில் கடற்காற்று வீசும்படியாக பெரிய பலகணிகள் வைக்கப்பட்டிருந்தன. அக்காலத்தில் கடலும் கோட்டையின் கீழ்புற மதிலை நெருங்கியிருந்ததால், காற்றுக் காலங்களில் அலைகள் மதிற் சுவரை மோதின.

கோட்டையில் அக்காலத்தில் கட்டப்பட்ட கட்டடங்கள் ஒன்றை இப்பொழுது அக்கவுன்டன்ட் ஜெனரலின் ஆபிஸா (Office of the Accountant-General)க உபயோகிக்கிறார்கள். இதில் சுமார் நூற்றெண்பது வருஷங்களுக்கு முன்னர் கீர்த்தி பெற்ற க்ளைவ் பிரபுவும் அவர் மனைவியும் வசித்தார்கள். க்ளைவே ஆங்கிலேய ராஜ்

யத்தை இந்தியாவில் நிலை நிறுத்தினவர். இவர் சில வருஷகாலம் சென்னையில் ராணுவ வேலையில் இருந்தபொழுது ஒரு மாதை மணந்து கொண்டார். இவரைப்பற்றி நீங்கள் இந்து தேச சரித்திர புத்தகங்களில் விவரமாய்ப் படிக்கலாம்.

கோட்டையிலுள்ள வீதிகளுக்கு அக்காலத்திலிடப்பட்ட பெயர்களே தற்காலமும் வழங்கி வருகின்றன.

இந்தியாவுக்கு ஆங்கிலேயர்கள் முதலில் வியாபார நிமித்தமாக வந்தார்கள். இங்கிலாந்தில் இந்தியாவுடன் வியாபாரம் செய்ய அதிகாரம் பெற்ற சங்கம் ஒன்று ஏற்பட்டிருந்தது. அதற்குகிழக்கிந்தியா கம்பனி (East India Compnay) யென்று பெயர். இச்சங்கத்தினர் அன்றி மற்ற ஆங்கிலேயர் எவரும் இந்தியாவில் வியாபாரம் செய்யக்கூடாது. இக்கம்பனியைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்களே நமது பட்டணத்தில் அதிகாரம் செலுத்திவந்தார்கள். இவர்கள் தலைவனுக்கு கவர்னர் என்று பெயர் வழங்கிற்று. கவர்னரும் உயர்தர உத்தியோகஸ்தர்களும் கோட்டையின் நடுவிலிருந்த உள் கோட்டையில் வசித்துவந்தார்கள். மற்ற உத்தியோகஸ்தர்கள் வசிப்பதற்கு விடுதிகளும் சரக்குகளை பத்திரப்படுத்துவதற்குக் கிடங்குகளும் கோட்டையின் மதிற்சுவரோரமாக விருந்தன. சுமார் இருநூறு வருஷங்களுக்குமுன் முதலில் கட்டப்பட்ட உள் கோட்டையை யிடித்து அதைவிடப் பெரிதான கட்டடம் ஒன்றைக் கட்டினார்கள். இக்கட்டடம் பிற்காலத்தில் அநேக விதங்களில் மாறுபாடடைந்தது. இதில் இப்பொழுது

கவர்ன்மேண்ட் ஆபீஸ் (Government Secretariat) நடைபெற்று வருகிறது.

இக்கட்டடத்தின் கிழக்கே கடற்கரைக்கு எதிராக ஒரு கட்டடம் புதிதாக ஏற்பட்டிருக்கிறது. அதன் முகவாயிலிலும் பக்கங்களிலும் கருமையான கற்றூண்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவைகள் கோட்டையிலே வெகுகாலமாயிருந்தவைகள். இக்கட்டடம்தான் சென்னை மாகாண சட்ட சபை (Madras Legislative Council) கூடுமிடம்.

நாளாவட்டத்தில் கோட்டைக்குள்ளிருந்த ஜனங்களின் தொகையும் வீடுகளும் அதிகமாயின. கோட்டையின் மதிற்சுவர்களும் உறுதியாய்ப் புதுப்பிக்கப்பட்டன. பதினெட்டாம் நூற்றூண்டின் பிற்பகுதியில் தென்னிந்தியாவின் நிலை பெருங்குழப்பமுற்றிருந்தது. ஆங்கிலேயருக்கு மாறுகப் பிரெஞ்சுக்காரர் (French) என்னும் ஐரோப்பியரும், மைசூர் அரசனுயிருந்த ஹைதர் அலியும் அடிக்கடி சண்டை செய்தார்கள். ஆகையால் ஆங்கிலேயர் சென்னைக்கோட்டையையும் பட்டணத்தையும் பலப்படுத்திக்கொண்டார்கள். ஒருகால் பிரெஞ்சுக்காரர் சென்னையைக் கைப்பற்றி, மூன்று வருஷ காலம் தாங்களே வைத்திருந்தார்கள். ஆங்கிலேயர்கள் நகரத்தைத் திரும்பிப்பெற்றபின் கோட்டையைச் சீர்ப்படுத்தினர்கள். கோட்டையின் மேற்காக ஓடிக்கொண்டிருந்த வடக்காற்றை வேறு வழியிற் செல்லப் பள்ளந் தோண்டித் திருப்பிவிட்டார்கள். புதிய கொத்தளங்களையும், மதிற்சுவர்களுக்கு வெளிப்பக்கத்தில் மைதானங்களையும் ஏற்படுத்தினர்கள். இம்

மாறுதல்களால் கோட்டையின் விஸ்தீரணம் அதிகமாயிற்று; பல புதிய கட்டடங்களும் ஏற்பட்டன.

கோட்டையிலுள்ள கட்டடங்கள் அனேகம் உத்தியோக சாலைகளாகவும் பட்டாளங்களின் விடுதிகளாகவும் உபயோகப்பட்டு வருகின்றன. எல்லாக் கட்டடங்களுள் அதிகப் பழமையானது மேரி மாதா கோயில் (St. Mary's Church). அதன் கோபுரம் உன்னதமானது; அதன் சுவர்களும் கூரையும் குண்டுகள் ஊடுருவிச் செல்லாவண்ணம் பலமாய்க் கட்டப்பட்டுள்ளன.

கோட்டைக்குப் பல வாயில்கள் உண்டு. கிழக்கு மதிலின் நடுவில் ஒரு பெரிய வாயில் உண்டு. அதற்கு கடற்கரை வாயில் (Sea-Gate) என்று பெயர். மேற்கே இரண்டு வாயில்கள் உள்ளன. அவற்றுள் தென்புறமாயிருப்பதற்கு வாலாஜா வாயில் (Wallajah Gate) என்றும், வடக்கே இருப்பதற்கு ஸெயின்ட் ஜார்ஜ் வாயில் (St. George's Gate) என்றும் பெயர்கள் வழங்குகின்றன. வாலாஜா நவாப் பதினெட்டாம் நூற்றூண்டில் ஆங்கிலேயருக்குப் பெருந்துணையாய் நின்று, பல வருஷகாலம் சென்னையிலேயே வசித்துவந்தான். இவனைக் கௌரவப்படுத்தும்பொருட்டு, ஆங்கிலேயர் கோட்டையின் வாயிலொன்றுக்கு வாலாஜா வாயிலென்றும், அதற்கெதிரிலுள்ள பாலத்திற்கு வாலாஜா பாலமென்றும் பெயரிட்டார்கள். வாலாஜா வசித்த அரண்மனை சேப்பாக்கத்தில் கடலோரத்திலிருக்கிறது. அது தற்காலத்தில் வருவாயாபீஸாக உபயோகப்பட்டுவருகிறதென்று நீங்


கள் படித்திருக்கிறீர்கள். இவ்வரண்மனையி னின்று மலைச்சாலைக்குப் போகும் வீதிக்குக்கூட வாலாஜா வீதியென்று பெயர் வந்தது.

அக்காலத்தில் கோட்டைவாயில் ஒவ்வொ ன்றுக்கும் முன்னால் மூடு பாலம் (draw-bridge) இருந்தது. கோட்டையைச்சுற்றி ஆழமான அகழி யொன்றையும் வெட்டினார்கள். இவ்வக ழியைக் கடக்கவே மூடு பாலங்களை யேற்படுத்தி னார்கள். சண்டைக்காலத்தில் மூடுபாலங்களை மேலேயிழுத்தால் அவைகள் கோட்டைவாயில் களை மூடிக்கொள்ளும். மதிற்சுவர் அதிக அக லமா யுள்ளதால் அதனூடே செல்லும் பாதை குகையைப்போல் இருண்டிருக்கும். அங்கு வண் டிகள் செல்லுகையில் அதிகமாய் எதிரொலி கிளம்பும். கோட்டையிலிருக்கும் ராணுவ வீரர் கள் வெளியிலுள்ள மைதானங்களில் படைக் கலம் பயிலுவார்கள்.

## அத்தியாயம் VII

## பழைய கோட்டையும் பட்டணமும் (I)

ஆங்கிலேயர் முதலில் சென்னையில் கட்டிய கோட்டை தற்காலத்திலுள்ள கோட்டையைப் போல் அமைந்திருக்கவில்லை. அக்காலத்தில் வடக்காறு கடலுக்கு மிகவும் அருகில் ஓடிற்று. அதுவே கோட்டையின் மேற்கெல்லையாயிருந் தது. கோட்டைக்குள் தென்புறத்தில் தண்ணீர் நிறைந்த அகழி ஒன்றிருந்தது. வடக்கில் கரும் பட்டணம் இருந்தது. கடலும் மிகவும் அருகி




பழைய கோட்டையும் பழைய பட்டணமும்

லேயேயிருந்தது. இப்பொழுதுள்ள அகன்ற மணற்பாங்கான கடற்கரை முன்னில்லை.

உள்கோட்டையைச் சுற்றிலுமிருந்த சுவர்களின்மேல் கொத்தளங்களிருந்தன. அவைகளில் பீரங்கிகள் வைக்கப்பட்டிருந்தன. கம்பனியைச் சேர்ந்த ஆங்கிலேயர் எல்லோரும் உயர்வு தாழ்வின்றி ஒன்றாக, கம்பனியின் பண்டக சாலை (Factory House) யில் வசித்துவந்தார்கள். முதலில் தங்களுடைய மனைவிமக்களை அவர்கள் தங்களுடன் இந்தியாவுக்கு அழைத்து வரவில்லை. அவர்களெல்லோரும் ஒன்றாகவே சாப்பிட்டும், ஒரே கோயிலில் கடவுளைத் தொழுதும், ஒரே கட்டடத்தில் தங்களுக்குரிய வேலைகளைச் செய்தும்வந்தார்கள். அவர்கள் வியாபாரநிமித்தமே நம் நாட்டிற்கு வந்தவர்களல்லவா? இங்கிலாந்தினின்றும் கப்பல்களில் வரும் பண்டங்களை இறக்குமதிசெய்து அவைகளை இந்தியர்களுக்கு விற்றார்கள். இந்தியாவிலகப்பட்ட பொருள்களைச் சேகரித்து, தங்கள் தேசத்துக்கனுப்பினார்கள். அவைகளுள் முக்கியமானது பருத்தித் துணியே.

நெசவுகாரர்களைத் தேடி அவர்களிடம் துணிகளை வாங்கினார்கள்; துணி நெய்வதற்கு முன்பணம் உதவினார்கள். துணியைச் சலவை செய்து சாயம் தோய்த்தார்கள். முத்து, வயிரம், இரத்தினம் முதலியவை விலைக்கு வந்தால் அவற்றை நிறுத்து, விலைமதித்து வாங்கினார்கள். சரக்குகளையெல்லாம் பரிசோதித்து அவைகளைப் பத்திரமாகக் கட்டி கப்பல்களில் ஏற்றுமதி செய்தார்கள். தங்கள் வரவு செலவு கணக்

குகளை அதிக ஜாக்கிரதையுடன் பார்த்துவந்தார்கள்.

மாலையில் வேலைமுடிந்தபிறகு, ஆங்கிலேய வாசிகள், மதுபானம்செய்தும், சூதாடியும், பந்து முதலியன விளையாடியும் காலங்கழித்தனர். சிலவேளை அவர்கள் ஒருவரோடொருவர் சண்டையிட்டுக்கொள்ளுவதும் உண்டு.

கம்பனியைச்சேர்ந்த ஆங்கிலேயரெல்லோருக்கும், சாப்பாட்டுச்செலவும், விடுதியும் கம்பனியாரே கொடுத்துவந்தார்கள். ஆனால் அவர்களுக்கேற்பட்ட சம்பளம் கொஞ்சமே. ஆகையால் அவர்கள் தாங்களே பலவழிகளில் பொருள்தேடத் தொடங்கினார்கள். சிலர் தாங்களே சொந்த வியாபாரம்செய்து லாபமடைந்தார்கள். மற்றவர் கம்பனிக்கென்று வாங்கின சாமான்களின் விலையைக் கூட்டியும், விற்ற சாமான்களின் விலையைக் குறைத்தும், கணக்கெழுதிப் பணம் திருடினார்கள். வேறு சிலர் லஞ்சம்பெற்றுக்கொண்டு சரக்குகள் நன்றாயிரா விட்டாலும், அவற்றை வாங்கினார்கள். ஆங்கிலேய வர்த்தகர்களில் அனேகர் சொற்பகாலத்தில் அதிகப்பணமீட்டி, பணக்காரர்களாகத் தம் நாட்டிற்குச் சென்றார். இம்மாதிரியான செயல்களையெல்லாம் நிறுத்தக் கம்பனியார் எவ்வளவோ முயன்றார்கள். ஆனால் ஒன்றும் பயன்படவில்லை.

நாளுக்குநாள் ஆங்கிலேயரின் வியாபாரமும் செல்வமும் விருத்தியடைந்துவந்தன. நகரமும் செல்வத்திலும், வியாபாரத்திலும் ஜனத்தொகையிலும் ஓங்கிற்று. நாளாவட்டத்தில் ஆங்கிலேயர் சென்னையில் தமக்கென்றே

ஒரு நாணய சாலை (Mint) யை யேற்படுத்திக் கொண்டார்கள். இச்சாலையில் வராகன் என்ற பொன் காசையும் வெள்ளி, செம்பு நாணயங்களையும் அடித்தார்கள். வெகுகாலம் இந்நாணயச்சாலை, நாணயச்சாலைத் தெரு (Mint Street) என்ற பெரிய வீதியின் வடகோடியிலுள்ள ஒரு பெரிய கட்டடத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது.

கோட்டையின் பாதுகாப்புக்காகப் படைவீரர்களும் ஏற்பட்டார்கள். அவர்கள் கவர்னரின் மெய்காப்பாளர் (body-guard) ஆகவும் இருந்தனர். கவர்னர் ஊர்வலம் வந்தபொழுது, அவரைச்சுற்றி மெய்காப்பாளரும், மற்ற உத்தியோகஸ்தர்களுமிருந்தார்கள்.

ஆங்கிலேயவாசிகள் எப்படி நடந்துகொள்ளவேண்டுமென்று சில விதிகளைக் கம்பனியதிகாரிகள் ஏற்படுத்தியிருந்தார்கள். அவர்கள் மிதமிஞ்சி மதுபானம் செய்யக்கூடாது; ஒருவரோடொருவர் சண்டையிடக்கூடாது; கடவுள் வழிபாட்டுக்காகத் தவறாது கோயிலுக்குச் செல்லவேண்டும்; இரவு எட்டு மணிக்குப்பின் கோட்டைக்கு வெளியில் ஒருவரும் தங்கக்கூடாது. இவை அவ்விதிகளுள் முக்கியமானவை.

கோட்டையேற்பட்டு சுமார் நாற்பது வருஷங்களானபிறகு மேரி மாதா கோயில் கட்டப்பட்டது. இக்கோயிலுக்குப் பக்கத்திலுள்ள முற்றத்தில் பல ஐரோப்பியரின் சமாதிக்கல் வெட்டுகள் பரப்பப்பட்டுள்ளன. இக்கற்கள் கோட்டையின் வெளிப்புறத்திலிருந்த கல்லறைகளினின்றும் கொண்டுவரப்பட்டன. ஒருகால் பிரெஞ்சுக்காரர்கள் சென்னையைத் தாக்கி அங்குள்ள

ஆங்கிலேயரின் சமாதிகளையிடித்துவிட்டார்கள். சண்டை முடிந்தபிறகு ஆங்கிலேயர் மற்றச் சமாதிகளை யிடித்துவிட்டு அவைகளின்மேல் இருந்த கற்களைமட்டும் எடுத்து, கோட்டையில் மாதா கோயிலின் முற்றத்தில் நாட்டினார்கள்.

இக்கோயிலினுள்ளே பிரபலமான கீர்த்தியுள்ள சில ஆங்கிலேயர் அடக்கஞ்செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்களுள் சிறந்தவர் ஸர் தாமஸ் மன்றோ. மன்றோ பிரபு சென்னை ராஜதானியில் நீண்டகாலம் உழைத்தார். பின்பு கவர்னர் பதவிபெற்று ஏழுவருஷ காலம் ராஜாங்கத்தை நடத்தினார். 1827-ம் வருஷம் வாந்திபேதி கண்டு காலமானார். அவர் ஞாபகார்த்தமாக அவருடைய உருவச்சிலையை, அவர் குதிரையின்மீது சவாரி செய்யுமாதிரி செய்து, ஒரு உயர்ந்த பீடத்திலேற்றி, தீவு மைதானத்தின் மத்தியில் ஸ்தாபித்திருக்கிறார்கள்.

நாளாவட்டத்தில் கம்பனியார் நகர பரிபாலன சங்கமொன்றை யேற்படுத்தினார்கள். அச்சங்கத்தினரை நகரவாசிகள் தேர்ந்தெடுத்தார்கள். அவ்வங்கத்தின் தலைவனுக்கு மேயர் என்ற பட்டம் உண்டு. சங்கத்தார் நகர வீதிகளைச் செப்பனிட்டு சுத்தம்செய்தார்கள்; அற்ப வழக்குகளை விசாரித்துத் தீர்ப்புசெய்தார்கள்; சிறு குற்றங்களுக்குத் தண்டனை விதித்தார்கள். இம்மாதிரி அதிகாரம்செலுத்தி, தங்கள் செலவுக்காக ஜனங்களிடம் வரிவசூல் செய்ய அதிகாரம்பெற்றிருந்தார்கள். நகரத்தில் குழந்தைகள் பிறந்தாலும், யாராவது இறந்தாலும் சங்கத்தாரின் புத்தகங்களில் பதிவுசெய்யவேண்டுமென்று விதிக்கப்பட்டிருந்தது. சங்கத்தின

ரின் காரிய நிர்வாகத்துக்காக ஒரு பொதுக் கட்டடம் ஏற்பட்டது. அவர்கள் குற்றவாளிகளை யடைக்கும்பொருட்டு ஒரு சிறைச்சாலையைக் கட்டினார்கள். பிள்ளைகளுக்கு ஆங்கில பாஷை, கணிதம் முதலியவற்றைக் கற்றுக்கொடுக்கப் பள்ளிக்கூடங்களை யேற்படுத்தினார்கள். கோயில்களில் விழாக்கள் நடைபெறுவதற்குத் தகுந்த ஏற்பாடுகள் செய்தார்கள்.

இவ்விதமாகப் பொது நன்மைக்காக நகர பரிபாலன சங்கம் ஏற்பட்டு சுமார் 250 வருஷங்களாகின்றன. இச்சங்கமே வளர்ந்து அநேக மாறுபாடுகளடைந்து தற்காலத்திலுள்ள சென்னை நகர பரிபாலன சங்க (Madras Municipal Corporation) மாக விளங்குகிறது. ரிப்பன் கட்டடம் (Ripon Buildings) என்ற மாளிகையில் இச் சங்கத்தாரின் ஆபீஸும், சங்கக்கூட்டங்களும் நடைபெறுகின்றன. இக்கட்டடம், சுமார் 50 வருஷங்களுக்குமுன் ராஜப்பிரதிநிதியாயிருந்த ரிப்பன் பிரபுவின் ஞாபகார்த்தமாக, ரிப்பன் கட்டடம் என்று பெயரிடப்பட்டது. ரிப்பன் துரை நகர பரிபாலன சங்கங்களை நன்னிலைக்குக் கொண்டுவந்தார். இவருடைய உருவச்சிலை நமது நகரத்திலுண்டென்று உங்களுக்குத் தெரியும். நமது நகர பரிபாலன சபையைப்பற்றி நீங்கள் விளக்கமாய்ப் பின்னால் வாசிப்பீர்கள். இச்சபையை யொட்டித்தான் நமது ராஜதானியிலுள்ள மற்ற பட்டணங்களின் சங்கங்களும் ஏற்பட்டுள்ளன.

## அத்தியாயம் VIII

## பழைய பட்டணம் (II)

கோட்டைக்கு வடக்கேயிருந்த இந்தியர் பட்டணம் சிறிது காலத்துக்குள் அபிவிருத்தியடைந்தது. முதலில் இது கோட்டையின் வடக்கு மதிலினின்றும் அரமனைக்காரன் தெருவின் தென்கோடிவரையிலும் பரவியும், கடற்கரையினின்றும் பிராட்வே மூனைவரையிலுமகன்றும் இருந்தது. இதன் வடபுறமாகவும் மேற்குப்புறமாகவும், பாதுகாப்பின் பொருட்டு மண்சுவர்கள் எழுப்பப்பட்டன. இங்கு வசித்தவர்களுள் மகம்மதியரின் தொகை மிகவும் குறைவே. இவர்கள் மூர் என்ற பெயர் பெற்றூர்கள்; இவர்கள் வசித்த தெருவுக்கு மூர்வீதி என்றே பெயர் வந்தது; தற்காலத்திலும் இப்பெயரே அத்தெருவிற்கு வழங்கிவருகிறது. இந்துக்களுள் பெரும்பான்மையோர் தெலுங்கர்களும் தமிழர்களுமாக இருந்தார்கள். இவர்களுள் பலர் வர்த்தகத்தொழில் செய்துவந்தார்கள்; தங்களுக்கென்று பல கோயில்களைக் கட்டிக்கொண்டார்கள். இவைகளுள் முக்கியமானது சென்ன கேசவப்பெமாள் ஆலயம் (பட்டணங்கோயில் எனப்படும்) அது நகரம் உண்டான காலத்திலேயே யேற்பட்ட கோயில். முதலில் அது தற்காலம் உயர்தர நியாயஸ்தலக் கட்டடத்தின் அருகே கட்டப்பட்டது. பிற்பாடு பதினெட்டாம் நூற்ருண்டில் அக்கோயிலை யிடித்துவிட்டார்கள். பூக்கடையண்டை ஒரு புதிய

கோயிலைக் கட்டினார்கள். இதுவே பட்டணங் கோயில் என்று பெயர் பெற்று விளங்குகிறது.

கோட்டையையொட்டி, வடபுறத்தில், அதாவது கோட்டைக்கும் இந்தியர் பட்டணத்துக்கும் இடையில், ஒரு பெரிய கடைவீதியிருந்தது. இதைத்தவிர வேறு சில தெருக்களிலும் கடைகள் நிரம்பியிருந்தன. கோயில்களில் திருவிழாக்கள் சிறப்பாக நடைபெற்றன.

அக்காலத்தில் பட்டணத்தின் தெருக்கள் குறுகியிருந்தன; அவைகளில் வண்டிகள் போக்குவரவு அதிகமாயில்லை. பணக்காரர்கள் பல்லக்குகளிலேறிச் சென்றார்கள். பல்லக்குத் தூக்குவோர்கள் ஜனங்கள் இருபுறமும் விலகப் பாடிக்கொண்டே ஓடினார்கள். கனவான்கள் கால் நடையாய்ச் சென்றபொழுது, அவர்கள் மேல் வெயில் படாதபடி, வேலைக்காரர்கள் குடைபிடித்து அவர்களுக்குப்பின் சென்றார்கள். சிலர் குதிரையேறிச் சவாரி செய்தார்கள். மற்றுஞ் சிலர் அழகாய்ச் சிங்காரிக்கப்பட்ட யானைகளின்மீது சவாரிசெய்தார்கள்.

களவு பட்டணத்தில் அதிகரிக்கவே, ஜனங்களின் பாதுகாப்புக்காகப் போலீஸாரை யேற்படுத்தினார்கள். அவர்கள் தலைவனுக்குப் பெத்த நாயக்கன் என்று பெயர் வழங்கலாயிற்று. இப்பட்டத்தின் பொருள் தலைமை வீரன் ஆகும். இவன் போலீஸ் சேவகர்களை நியமித்து, திருட்டுகளைக் கண்டுபிடித்து, திருடர்களையும் குற்றவாளிகளையும் தண்டித்தான். முதல் பெத்த நாயக்கன் சந்ததியார்களும் அவனுக்குப்பின் அந்த உத்தியோகத்தை வகிக்கலாயினர். நமது நகரத்திலுள்ள பெத்தநாயக்கன் பேட்டை என்

னும் பெயர் வந்ததற்கு காரணமாயிருந்தவன் இந்த அதிகாரியே. இவனுடைய ஜீவனத்துக்காக ஆங்கிலேயர் இவனுக்கு மிகுந்த நிலங்களை ஜமீனுகக் கொடுத்திருந்தார்கள். ஆங்கிலேயருக்குத் தேச பாஷைகள் சரியாகத் தெரியாததினுல், இவர்கள் இந்திய வியாபாரிகளின் மூலமாகவே தங்களுடைய காரியங்களை நடத்த வேண்டியதாயிற்று. ஒவ்வொரு ஆங்கிலேய வர்த்தகனுக்கும் துவிபாஷி (Dubash) என்ற பட்டம் பெற்ற இந்திய வர்த்தகன் உதவியாயிருந்தான். துவிபாஷி என்றுல் இரண்டு பாஷைகளை (ஆங்கிலத்தையும் தேச பாஷையையும்) பேசத் தெரிந்தவன் என்று பொருள். இத்துவிபாஷிகளில் பலர் லாபமடைந்து தங்கள் குடும்பங்களை உன்னத ஸ்திதிக்குக் கொண்டுவந்தார்கள்.

பழைய பட்டணத்துக்கு வடக்கே முத்தியாலு பேட்டை என்றோர் கிராமம் ஏற்பட்டது. இக்கிராமம் தற்காலத்தி லிருப்பதுபோலவே பிராட்வேயினின்றும் கடற்கரைவரையிலும் பரவியிருந்தது. இதில் இந்துக்களும், மகம்மதியரும், யூதஜாதி வியாபாரிகளும், அர்மீனிய தேச வர்த்தகர்களும் வசித்தனர். யூதரும் அர்மீனியரும் முத்து, பவளம், இரத்தினம் முதலிய சரக்குகளை வாங்கியும் விற்றும் வந்தனர். இவர்கள் முத்துவியாபாரம் முக்கியமாக நடத்திவந்தபடியால், இக்கிராமத்திற்கு முத்தியாலு பேட்டையென்ற பெயர் வழங்கலாயிற்று. பவள வியாபாரிகளும் ஒரு வீதியில் குடியிருந்து வியாபாரம்செய்து வந்ததினுல், அந்த வீதிக்கு பவளக்காரத்தெரு என்று இக்காலமும் பெயர் வழங்கிவருகிறது. அவ்வீதியைச் சுற்றியுள்ள

பேட்டைக்கும் பகடாலுப் பேட்டை (பவளப் பேட்டை) யென்று பெயர் வழங்கி வந்ததாகச் சிலர் சொல்லுவார்கள்.

அக்காலத்தில் வயல்களினின்றும் வடிந்த நீர் பாயும் கால்வாய் ஒன்று தெற்கு நோக்கி, தற்காலத்துப் பிராட்வேயின் வழியாய்ப் பாய்ந்து வடக்காற்றில் விழுந்தது. இக்கால்வாயே பழைய பட்டணத்துக்கும் முத்தியாலுபேட்டைக்கும் மேற்கெல்லையாயிருந்தது. இக்கால்வாயைக் கடந்தே பெத்தநாயக்கன்பேட்டைக்குச் செல்லவேண்டும். கம்பனியாருக்குத் துணிகளை நெய்வோரும் (Weavers), சலவை செய்வோரும் (Washers), சாயந்தோய்ப்போரும் (Dyers) ஆதியில் பெரும்பாலும் இக்கிராமத்திலேயே வசித்து வந்தார்கள். நெய்வதற்கும், சலவை செய்வதற்கும், சாயந்தோய்ப்பதற்கும் விசாலமான வீதிகளும், நிழல் தரும் மரங்களும், நல்ல நீரும் வேண்டியிருந்தபடியால், நாளாவட்டத்தில் இத்தொழிலாளர் பழைய பட்டணத்துக்குள் வசிக்கமுடியாமல் போயிற்று. பிறகு பெத்தநாயக்கன் பேட்டையும் ஜனநெருக்கமானபடியால், இவர்கள் அப்பேட்டையையும் விட்டகலவேண்டியதாயிற்று. சலவைசெய்வோர் பெத்தநாயக்கன் பேட்டையில் இருந்த வீதியே பிறகு தங்கசாலை வீதியாயிற்று. நாளாவட்டத்தில் இவர்கள் பட்டணத்துக்கு வடக்கே சென்று தற்காலம் வண்ணாரப்பேட்டை எனப்படும் ஊரில் குடியேறினர். இப்பதத்தின் பொருள் சலவை செய்வோர் குடியிருந்த கிராமம் என்பதே.

கோட்டைக்குத் தெற்கிலும் கூவம் நதியின்

முகத்துவாரத்துக்கு வடக்கிலும் செம்படவர்கள் வசித்து வந்தனர். இவர்கள் கட்டைமரத்தில் ஏறிக்கொண்டு கடலில் வெகுதூரம் சென்று மீன் பிடித்து விற்று வாழ்ந்தனர். ஸான்தோமுக் கருகிலும், கடற்கரை யோரமான விடங்களிலும் இம்மாதிரி பல செம்படவச் சேரிகள் இருந்தன. இவர்களே கம்பனியாரின் சரக்குகளைப் படகு களிலேற்றி, கப்பல்களினின்று கொண்டுவந் தும், அவைகளில் ஏற்றியும் வந்தனர்.

பட்டணத்துக்கு வெளியேயுள்ள திருவல் லிக்கேணி, மயிலாப்பூர் முதலிய ஊர்களைப்பற்றி நீங்கள் படித்திருக்கிறீர்கள். ஆங்கிலேயர் முத லில் சந்திரகிரியரசனிடமிருந்து பெற்ற மானி யம் பழைய பட்டணம், கோட்டை, முத்தியாலு பேட்டை, பெத்தநாயக்கன்பேட்டை ஆகிய இந் நான்கும் அடங்கியுள்ளது. எழும்பூர், நுங்கம் பாக்கம், வேப்பேரி, இராயபுரம், திருவொற்றியூர் ஆகிய கிராமங்கள் இம்மானியத்தில் சேரவில்லை. இவ்வூர்களிலிருந்துதான் நகரவாசிகளுக்கு வேண்டிய பாலும், தயிரும், காய்கறி வகைகளும் கிடைத்தன. திருவல்லிக்கேணிக்கும் மயிலாப் பூருக்கும் மேற்கேயுள்ள இடம் ஒரு பெரிய சமவெளியாயிருந்தது. இவ்வெளியில் ஜனங் கள் வந்து குடியேறினபடியால் இங்கு இராய பேட்டை, புதுப்பாக்கம், நுங்கம்பாக்கம் என்ற புதிய ஊர்கள் தோன்றின.

வடக்காற்றின் மேற்கே நிலம் சதுப்பாயிருந் தது. இவ்விடம் பிற்காலத்தில் அனேக மாறு பாடுகளையடைந்தது. இங்குதான் பீபில்ஸ் பார்க் வனமும், அதன் வடக்கேயுள்ள உப்புக் கோட் டாரமும் தோன்றின.

36



அத்தியாயம் IX

# சென்னையின் முன்னேற்றம்

## (முதற் பாகம்)

சென்னை நகரம் ஏற்பட்டபொழுது சுற்றுப் பக்கங்களிலுள்ள நாடெல்லாம் சந்திரகிரியரசன் ஆளுகையின் கீழிருந்தது. சில காலத்துக்குள் பீஜப்பூர் என்ற தக்காண மகம்மதிய ராஜ்யத்தின் சுல்தான் இந்நாட்டைத் தன்வசப் படுத்திக் கொண்டான். அக்காலத்தில் மஹாராஷ்டிரர் என்ற ஒரு இந்துஜாதியார் மகம்மதியருக்கு விரோதமாகக் கிளம்பி, தக்காணத்தின் மேற்குப் பாகத்தில் தங்களுடைய ராஜ்யமொன்றை யேற் படுத்தினார்கள். அவர்கள் மகம்மதியருடன் அடிக்கடிப் போராடினர். மஹாராஷ்டிராருக்கு முதல் மன்னனுயிருந்த சிவாஜி கொள்ளையடிப் பதற்காகத் தென்னிந்தியாமீது ஒரு முறை படையெடுத்து வந்தான். அவன் சென்னையை யணுகிச் சென்றான். தங்களுடைய பட்டணத் தையும் கொள்ளையிடுவான் என்று ஆங்கிலேயர் பயந்து, அவனுக்குப் பல வெகுமதிகள் கொடுத்து, அவனைத் திரும்பும்படி செய்தனர்.

அக்காலத்தில் டில்லி சக்ரவர்த்தியா யிருந்த ஔரங்கசீப் என்னும் முகலாய மன்னன் தக்காணத்திலுள்ள மஹாராஷ்டிர ராஜ்யத்தை யழிக்கமுயன்றான். தக்காணத்திலிருந்த பீஜப் பூர் முதலிய மகம்மதிய அரசுகளையும், தென் னிந்தியாவில் கர்னடக தேசத்தையும் கைப் பற்றினான். ஒருகால் அவனுடைய பிரதிநிதி யாகிய கர்னடகதேசத்து நவாப் சென்னையைத்

தாக்க எண்ணங்கொண்டு வந்தான். ஆங்கிலேயரும் முகலாயருக்குக் கீழ்ப்படிந்து நடப்பதாக மனுச் செய்துகொண்டார்கள்.

அக்காலத்தில் ஆங்கிலேயரன்றி வேறு சில ஐரோப்பிய நாட்டார்கள், சோழமண்டலக் கரையில் பண்டகசாலைகளையும், கோட்டைகளையும் கட்டிக்கொண்டு வியாபாரம் செய்து வந்தனர். அவர்களுள் போர்த்துக்கீசர் ஸான்தோமை யாண்டுவந்தனர். அவ்வூரை டச்சுக்காரர் ஒருகால் கைப்பற்றிக்கொண்டனர். பின்னர் பிரெஞ்சுக்காரர் அப்பட்டணத்தைக் கைக்கொள்ள முயன்றார்கள். அக்காலம் ஐரோப்பாவில் ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் கடும்போர் நடந்துகொண்டு வந்தது. பிரெஞ்சியரும் ஸான்தோமைக் கைப்பற்றி, அதிலிருந்து திருவல்லிக்கேணிவரையிலும் ஒரு வீதியைக் கட்டினார்கள். சென்னைக் கோட்டைக்கு பிரெஞ்சுக்காரரால் அபாயம் நேரிடுமோவென்று ஆங்கிலேயர் பயந்தார்கள். தங்களுடைய பட்டணத்தையும் கோட்டையையும் பலப்படுத்திக்கொண்டார்கள். டச்சுக்காரரும் மகம்மதியரும் ஒன்றுசேர்ந்து பிரெஞ்சுக்காரரை முறியடித்து ஸான்தோமைப் பிடித்துக்கொள்ளும்படி சூழ்ச்சி செய்தார்கள். பிரெஞ்சியரும் கடைசியாக ஸான்தோமையிழந்தனர். தெற்கு சென்று, புதுச்சேரியில் ஒரு கோட்டையை கட்டிக்கொண்டனர்.

டச்சுக்காரரின் தூண்டுகோலினால் மகம்மதியர் ஸான்தோமிலிருந்த கோட்டையை இடித்துவிட்டார்கள். அவ்வூரை விட்டோடிய போர்த்துக்கீசரும் திரும்பிவந்து மகம்மதியரின் கீழ் வாழ்வாராயினர். முகலாயரின் பிரதிநிதியா

37



யிருந்த கர்னுடக தேசத்தின் நவாபே ஸான் தோமுக்கு அடிக்கடி வந்து ஆங்கிலேயரிட மிருந்து பரிசுகள் பெற்றுப்போவதுண்டு. கி. பி. 1749-ம் ஹூ நவாபிடமிருந்து ஆங்கிலேயர் ஸான்தோமையும் அதைச் சேர்ந்த மயிலாப் பூரையும் பெற்றனர்.

சென்னை சோழமண்டலக்கரையின் மத்தியி லிருக்கிறது. ஆகையால் தெற்கேயுள்ள துறை முகங்களிலிருந்து, வங்காள தேசத்துக்குச் செல் லும் கப்பல்களெல்லாம் இத்துறைமுகத்தில் தங்கி, தேவையான தண்ணீரும் மற்றச் சாமான் களும் பெற்றுச் சென்றன. வங்காளத்திலுள்ள ஆங்கிலேயர் அடிக்கடி தேகசுகத்தின்பொருட்டு சென்னைக்கு வருவதுண்டு.

சென்னையின் வியாபாரம் அதிகரிக்கவே, கம்பனியைச் சேராத ஆங்கிலேயர் பலர் தாங் களும் இந்தியாவுக்கு வந்து வியாபாரம்செய்து பொருள் சம்பாதிக்க விரும்பினர். கம்பனி யாரோ இவர்களை இப்படிச் செய்வதற்கு விட வில்லை; தங்களுத்தரவு மீறி வியாபாரம் செய் தவர்களை தண்டனைக்குள்ளாக்கினுர்கள். ஆனுல் பலர் கள்ளத்தனமாக இந்தியாவுக்கு வந்து வர்த்தகம் செய்தார்கள். இக்கள்ள வியாபாரி களு (Interlopers) ள் ஒருவனுன தாமஸ் பிட், எவ்வாறே கம்பனியாரின் நல்லபிமானத் தைப் பெற்று சென்னையில் பதினேரு வருஷ காலம் கவர்னர் பதவியை வகித்தான். அவன் புத்தி சாதுரியமும் தீரமும் வாய்ந்தவன். அவ னுடைய காலத்தில் சென்னை அதிக விருத்தி யடைந்தது. ஒருகால் நவாப் சென்னையை முற்றுகையிட எண்ணி, நகரத்திற்குப் போக்கு

வரவில்லாமல் செய்தான். பிட் பட்டணத்தைச் சுற்றியிருந்த சுவர்களைப் பலப்படுத்தி, அவைகளின்மீது பீரங்கிகளை நாட்டி, யுத்தம் செய்வதற்குத் தயாராயிருந்தான். நவாபும், சென்னையைக் கைப்பற்ற முடியாது, சமாதானத்துக்கிசைய வேண்டியிருந்தது. பிறகு ஆங்கிலேயர் முகலாயருடன் ஒரு உடன்படிக்கை செய்துகொண்டு சில சுதந்திரங்களைப் பெற்றார்கள். ஸான்தோமைத் தங்களுக்குக் கொடுத்துவிடவேண்டுமென்று நவாபை அடிக்கடி கேட்டுக்கொண்டார்கள்; திருவொற்றியூரையும் தாங்கள் பெறவேண்டுமென்று விரும்பினார்கள். நவாப் இதற்குச் சம்மதிக்காதுபோனாலும், நுங்கம்பாக்கம், எழும்பூர், வியாசர்பாடி என்னும் கிராமங்களை ஆங்கிலேயருக்குக் கொடுத்தான். பறங்கிமலையில் ஒரு பாகத்தை ஆங்கிலேயர் சம்மானமாகப் பெற்றார்கள். இவ்வூர்கள் சேர்ந்ததினால் சென்னையின் விஸ்தீரணம் அதிகமாயிற்று.

பிட் கவர்னராயிருந்த காலத்தில் சென்னையின் ஜனங்களுக்குள் அனேக சச்சரவுகள் ஏற்பட்டன. இந்துக்களுள் இடங்கை, வலங்கையென்ற கட்சிகள் ஒன்றோடொன்று சண்டையிட்டுக்கொண்டன. வலங்கை வகுப்பைச் சேர்ந்தவர்கள் கோமுட்டி செட்டிகளும் வெள்ளாழரும். இடங்கை வகுப்பைச் சேர்ந்தவர்கள் மற்ற செட்டிமாரும், கருமார்களும். இவ்விருதிறத்தார் ஒவ்வொருவருக்கும் பிரத்தியேகமாயேற்பட்ட தெருக்களில் வசித்துவந்தனர். சில வீதிகளில் இருகட்சியாரும் கலந்து வாழ்ந்தனர். ஒரு சமயம் இவ்விருகட்சியார்களுக்கும்

பெருங்கலகம் உண்டாயிற்று. கவர்னரும் அதிக திறமையுடன் கலகத்தை யடக்கினன். வலங்கையார் பெத்தநாயக்கன் பேட்டையில் வசிக்க வேண்டுமென்றும் இடங்கையார் முத்தியாலு பேட்டையில் வசிக்கவேண்டுமென்றும் ஏற்பாடு செய்தான். தற்காலமும் முத்தியாலுபேட்டையில் பேரி செட்டிமார்களும், பெத்தநாயக்கன் பேட்டையில் கோமுட்டி செட்டிமார்களுமே அதிகமாயிருந்து வருகிறார்கள்.

பிட்டுக்குப்பின் வந்த கவர்னர்கள் சென்னையின் வியாபாரத்தை விருத்திபண்ணி நகரத்தையும் செழித்தோங்கச் செய்தார்கள்.

## அத்தியாயம் X

## சென்னையின் முன்னேற்றம்

## (இரண்டாம் பாகம்)

சென்னையில் விசேஷமாய் கலிகோ என்னும் துணியே நெய்யப்பட்டது. இங்கிலாந்து ஜனங்கள் அதை உள்ளுடையாக அதிகமாய் உபயோகப்படுத்தினர். ஆகையால் அந்துணியைப் பெருவாரியாக ஆங்கிலேயர் இங்கிலாந்துக்குச் சென்னையிலிருந்து அனுப்பினார்கள். கம்பனியார் தொழிலாளர்களுக்கு முன்பணமுதவியும், தங்கள் மேற்பார்வையின்கீழ் துணிகளை நெய்தும் அவைகட்குச் சாயந்தோய்த்தும் வருவாராயினர். இப்படிக் கம்பனியாரிடம் அமர்ந்த தொழிலாளர்கள் பெத்தநாயக்கன் பேட்டையில் வசித்துவந்தார்கள். பிறகு ஜன நெருக்கத்தின்பொருட்டு, பட்டணத்தைவிட்டு

வண்ணாரப்பேட்டையில் குடியேறினார்கள். இப்படிக் குடியேறினவர் ஜாதியில் வண்ணாரல்லர். வண்ணாரப்பேட்டையில் புதுத்துணிகளின் உரப்பையெடுத்து, சலவைசெய்து சாயந்தோய்த்தார்கள்.

பிட் துரைக்குப்பின் கால்லெட் (Collett) என்பவன் கவர்னராய் சென்னையை சிறிது காலம் ஆண்டான். அவன் காலத்தில் துணி வியாபாரம் மிகவும் விருத்தியடைந்தது. அவன் சென்னையைச்சுற்றியுள்ள கிராமங்களைச் சீர்ப்படுத்தினான். நெசவுகாரர்களையும் சாயந்தோய்ப்போர்களையும் வண்ணாரப்பேட்டைக்குச் சற்று வடக்கேயுள்ள ஒரு கிராமத்தில் குடியேறச் செய்தான். கவர்னரின் ஞாபகார்த்தமாக, தங்களுடைய கிராமத்துக்குக் கால்லெட் பேட்டை என்று பெயர் வழங்கினார்கள். அது தற்காலம் காலாடிப்பேட்டை (அதாவது போக்கிரிகள் வாசம்செய்யும் கிராமம்) என்று விபரீதப் பொருள்கொள்ளும்படியாக மாறியிருக்கிறது. அக்கிராமத்திலுள்ள விஷ்ணு கோயிலை அந்தக் கவர்னரே ஸ்தாபித்தாரென்பது தக்க ஆதாரங்களால் நமக்குத் தெரியவருகிறது. 18-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் இவ்வூர்உண்டாயிற்று.

1734-ம் வருஷத்தில் கூவம் நதிக்கரையோரமாகத் தீவு மைதானத்துக்கு மேற்கே ஒரு புதிய நெசவுகாரரின் கிராமம் ஏற்பட்டது. இதற்குச் சிந்தாதிரிப்பேட்டை யென்று பெயர் வழங்கலாயிற்று. இங்கு நூல் நூற்போரும் நெசவு செய்வோரும், சாயந்தோய்ப்போரும், கோயிலில் பணிசெய்யும் பிராமணருமே முதலில் வசித்து வந்தனர்.

இப்படிச் சென்னையின் வியாபாரமும் செல்வமும் அதிகரிக்கவே, ஆங்கில உத்தியோகஸ்தர்களும் வர்த்தகர்களும் தனவந்தர்களாகி, ஆடம்பரமாய் வாழலாயினர்; அவர்கள் விலையுயர்ந்த உடைகளையும் ஆபரணங்களையும் அணிந்தார்கள்; பந்தயக் குதிரைகளை வைத்திருந்தார்கள். கோட்டைக்குத் தெற்கேயும் மேற்கேயுமுள்ள வெளிகளில் விசாலமான தோட்டங்கள் சூழ்ந்த பங்களாக்களைக் கட்டிக்கொண்டனர். தற்காலம் ஜெனரல் ஆஸ்பத்திரியிருக்குமிடத்தில் கவர்னர் வசிப்பதற்கென்று ஒரு விசாலமான பங்களா இருந்தது. கூவம் நதிக்கரையிலும் அதன் தெற்கேயுள்ள பெரிய வெளியிலும் பல வீடுகளும் தோட்டங்களும் நாளாவட்டத்தில் ஏற்பட்டன. இவ்வெளியிலேதான் இராயபேட்டை முதலிய புதிய கிராமங்கள் ஏற்பட்டனவென்று நீங்கள் படித்தீர்கள்.

1740-ம் வருஷத்தில் மஹாராஷ்டிரர்கள் தென்னிந்தியாவைக் கொள்ளையிடுவதற்காகப் படையெடுத்து வந்தனர். அவர்கள் கர்னுடக நவாபாகிய தோஸ்த் அலியுடன் போர்புரிந்து அவனைக் கொன்று, அவனுடைய தலைநகராகிய ஆற்காட்டைக் கைக்கொண்டனர். நவாபின் மகன் மஹாராஷ்டிரர்களுக்கு லஞ்சங் கொடுத்து அவர்களுடன் சமாதானமானுன். நவாபின் மருமகனும் திருச்சினப்பள்ளியின் அதிகாரியாயுமிருந்த சந்தாஸாஹிப் என்பவனையும் மஹாராஷ்டிரர் எதிர்த்தனர். திருச்சினப்பள்ளியைப் பிடித்துக்கொண்டு, சந்தாஸாஹிபையும் சிறையிட்டுத் தங்கள் தேசத்திற்கனுப்பினுர்கள்.

இக்குழப்பங்களினால் கர்னாடகம் சீர்குலைந் தது. ஆங்கிலேயரும் சென்னப்பட்டணத்தைப் பலப்படுத்தி, பொருளும் பண்டமும் சேகரித்து வைத்தார்கள். மஹாராஷ்டிரர் தங்களைத் தாக்கு வாரோ என்று பயந்தனர். புது நவாபுக்கும் அவர்களிடமிருந்து பல துன்பங்கள் நேர்ந் தன. அவன் தன்னுடைய மனைவியையும் மக் களையும் பாதுகாப்புக்காகச் சென்னைக்கனுப்பி னான்; ஒருமுறை தானே சென்னைக்கு வந்தான். சிறிதுகாலத்தில் நவாபும் ஒரு கலகத்தில் கொலையுண்டான். அவனுடைய சிறு மகன் சென்னையிலிருந்தான். ஆங்கிலேயரும் இச்சிறு வனையே புது நவாபாகக் கொண்டாடினார்கள். இப்பிள்ளையும் பட்டத்துக்கு வந்து சில மாதங் களானதும் கொலையுண்டான்.

இது இப்படியிருக்க தக்காணத்தில் முகலாய ராஜப்பிரதிநிதியாக அரசாண்ட நிஜாம் அல் மூல்க் என்னும் பெரிய வீரன் நாட்டைச் சீர்ப் படுத்த நினைத்து ஒரு பெரும்படையுடன் கர்னா டகத்துள் பிரவேசித்தான். தலைவனற்றிருந்த கர்னாடகத்துக்கு ஒரு மகம்மதிய வீரனைத் தேர்ந் தெடுத்தான். இவன் பெயர் அன்வர் உத்தீன். இவன் சில வருஷகாலம் அரசுபுரிந்தான். இவ னுக்கு ஆங்கிலேயர்மீது அதிகமான நல்லபி மானம் இல்லை; இவன் புதுச்சேரியிலுள்ள பிரெஞ்சுக்காரருடன் அதிக சினேகிதம் பாராட் டினான். பிரெஞ்சு கவர்னராயிருந்த டியூப்ளே யும் இந்திய அரசர்களுடன் நட்புக்கொண்டு நல்லுறவு பாராட்டிவந்தான். ஆங்கிலேயரின் வியாபாரத்தைக் கெடுத்து அவர்களுடைய

செல்வாக்கை யழித்துவிடவேண்டுமென்பதே அவன் கருத்து.

ஐரோப்பாவில் அச்சமயம் ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் போர் நடந்துகொண்டிருந்தது. புதுச்சேரியைத் தாக்க ஒரு ஆங்கில கப்பற்படை வங்களாக்குடாக்கடலில் வந்து சேர்ந்தது. அப்பொழுது நவாப், டியூப்ளேயின் தூண்டுதலினால் ஆங்கிலேயர் புதுச்சேரியைத் தாக்கக்கூடாதென்று உத்தரவுசெய்தான். அதனால் ஆங்கில கப்பற்படை ஒன்றுஞ் செய்யாது வேறிடஞ் சென்றது. சில மாதங்களுக்கெல்லாம் பிரெஞ்சு கப்பற்படையொன்று வரவே, டியூப்ளே இதுதான் சென்னையை நாசமாக்கத் தகுந்த சமயம் என்று எண்ணினான். ஆங்கிலேயர் நவாபுக்கு மனுச்செய்துகொண்டார்; ஆனால் அது ஒன்றும் பயன்படவில்லை.

பிரெஞ்சு கப்பற்படைத் தலைவனான லாபூர்டானே டியூப்ளேயின் உத்தரவுப்படி சென்னையைத் தாக்கினான் (1746-ம் வருஷம் ஸெப்டெம்பர் மாதம்). கப்பல்களும் கோட்டையின்மீது பீரங்கிப்பிரயோகஞ் செய்தன. பிரெஞ்சியரும் இந்தியர் பட்டணத்தைக் கைக்கொண்டு கோட்டையையும் தங்கள் வசமாக்கிக்கொண்டார்கள், சென்னைக்கவர்னரும் மற்ற உத்தியோகஸ்தர்களும் பிரெஞ்சியர் வசப்பட்டனர்.

லாபூர்டானே சென்னையை ஆங்கிலேயருக்கே திருப்பிக் கொடுத்து அதற்குப் பதிலாகப் பணம் பெற்றுக்கொள்ளவேண்டும் என்றெண்ணினான். டியூப்ளேயோ சென்னையைப் பிரெஞ்சியர் ஆளவேண்டுமென்று சொன்னான். இவ்விருவருக்கும் அபிப்பிராய பேதமும் சச்

சரவுமுண்டாயின. டியூப்ளேயும், லாபூர்டானே ஆங்கிலேயருடன் செய்த உடன்படிக்கைக்கு மாருக நடந்து, சென்னையைத் திருப்பிக்கொடுக்காது, அதைத் தானே மூன்று வருஷகாலம் ஆண்டுவந்தனன்.

பிரெஞ்சுக்காரரும் கோட்டையைச் சுற்றி மைதானமேற்படுத்திஞர்கள். இதற்காக கோட்டையின் மதிற்சுவரை ஒட்டியிருந்த பல வீடுகளை யிடித்துத் தள்ளினர்கள். நகரத்தின் வியாபாரமும் பிரெஞ்சியர் ஆளுகையில் குறைந்தது. சில இந்தியர்கள் சென்னையை விட்டேகினர். சிலர் புதுச்சேரிக்குச் சென்று அங்கு குடியேறினர்.

புதுச்சேரிக்குத் தெற்கே, இரண்டு நதிகளின் முகத்துவாரங்களினிடையில் ஆங்கிலேயருக்கு ஸெயின்ட் டேவிட் கோட்டை (Fort St. David) சொந்தமாயிருந்தது. சென்னையினின்றும் தப்பியோடிய ஆங்கிலேயர் அங்கு போய்ச் சேர்ந்தனர். டியூப்ளே அக்கோட்டையையும் தாக்கிக் கைப்பற்ற முயன்ருன்.

அன்வர் உத்தீன் தன்னுத்தரவின்றிப் பிரெஞ்சுக்காரர் சென்னையைப் பிடித்துக்கொண்டதைப்பற்றிக் கோபங்கொண்டான்; தானே சென்னையைப் பிடித்துக்கொள்ள ஒரு சேனையையனுப்பினன். பிரெஞ்சியரும் அப்படையை ஸான் தோமுக்கருகில் அடையாற்றின் கரையோரமாக முற்றிலும் முறியடித்தார்கள். 1748-ம் வருஷம் ஆங்கிலேயரும் பிரெஞ்சுக்காரரும் சமாதானம் செய்துகொண்டார்கள். அடுத்த வருஷம் சென்னையும் ஆங்கிலேயரிடம் திருப்பிக் கொடுக்கப்பட்டது.


அச்சமயம் நிஜாம் அல் முல்க் இறக்கவே, தக்காணத்திலும் தென்னிந்தியாவிலும் பெரிய குழப்பமுண்டாயிற்று. அவனுடைய அரசுரிமையைப்பற்றி அவனுடைய மகனாகிய நஸிர் ஜங்கும், பேரனாகிய முஸபர்ஜங்கும் சண்டையிட்டுக்கொண்டார்கள். மஹாராஷ்டிரரிடம் சிறைப்பட்ட சந்தாஸாஹிபும் இதுதான் நல்ல சமயமென்று தன்னைச் சிறையினின்றும் விடுவித்துக்கொண்டு ஒரு பெரிய சேனையைத் திரட்டி, கர்னாடக நவாபின்மீது படையெடுத்தான். வரும்வழியில் முஸபர்ஜங்கையும் தன்னுடன் சேர்த்துக்கொண்டான்; இவ்விருவருக்கும் பிரெஞ்சுக்காரர் உதவிபுரிந்தனர். அன்வர் உத்தீனும் தோல்வியடைந்து யுத்தத்தில் மாண்டான்.

அன்வர் உத்தீனுடைய இரண்டாவது மகனாகிய மகம்மது அலி (வாலாஜா) திருச்சிராப்பள்ளிக்குத் தப்பியோடினான். சந்தாஸாஹிபுக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் மாறாக ஆங்கிலேயர் மகம்மது அலிக்கு உதவிசெய்ய முன்வந்தார்கள். மகம்மது அலியும், பிரதியுபகாரமாக, ஸான்தோமையும், சென்னைக்கு மேற்கேயுள்ள பூந்தமல்லியையும் இனமாகக் கொடுத்தான்.

நிஜாம் பதவிபெற்ற நஸிர்ஜங், தனக்குப் போட்டியாகக் கிளம்பிய முஸபர்ஜங்கை அடக்கி ஒடுக்கும்பொருட்டு, ஒரு பெருஞ்சேனையுடன் கர்னாடகத்தின்மேல் படையெடுத்துவந்தான். முஸபர்ஜங் பயந்து அவனிடம் சரணமடைந்தான். சந்தாஸாஹிப் மட்டும் பிரெஞ்சுக்காரரின் பலத்தால் நிஜாமுக்குக் கீழ்ப்படியவில்லை. ஒரு சூழ்ச்சியினால் நிஜாமின் சேனையில் கலகம்

உண்டாயிற்று; நிஜாமும் கலகக்காரரால் கொலையுண்டான். உடனே பக்கத்திலிருந்த பிரெஞ்சுப் படைகளின் உதவியால் முஸபர்ஜங் நிஜாம் பட்டத்தைப் பெற்றான்.

இப்படி டியூப்ளே வரவரப் பலமடைந்தான்; சந்தாஸாஹிபும் மகம்மது அலியை யொடுக்க, திருச்சிராப்பள்ளியை முற்றுகையிட்டான் (கி. பி. 1751). அப்பொழுது சென்னையில் ராணுவத்திலிருந்த க்ளைவுக்கு ஒரு யுக்தி தோன்றிற்று. கர்னாடகத்தின் தலைநகராகிய ஆற்காட்டை ஆங்கிலேயர் சுலமாய்ப் பிடிக்கலாம் என்று அவர் கவர்னருக்கு யோசனை சொன்னார். இந்த யோசனையை மெச்சி கவர்னர் ஒரு படையைத் தயார்செய்து, க்ளைவையே அதற்குத் தலைவனாக நியமித்து, அதை ஆற்காட்டைத் தாக்க அனுப்பினான். க்ளைவும் ஆற்காடு கோட்டையைச் சுலபமாய்ப் பிடித்துக்கொண்டார். ஆங்கிலேயருக்கு இந்த வெற்றியினால் பெருங்கீர்த்தி உண்டாயிற்று. அதிர்ஷ்டமும் அவர்களுடைய வசமாகவேயிருந்தது. சந்தாஸாஹிபின் படைகளைப் பலவிடங்களில் அவர்கள் தோற்கடித்தார்கள். திருச்சிராப்பள்ளியை முற்றுகையினின்றும் விடுவித்து, சந்தாஸாஹிபைச் சிறையிலிட்டு, மகம்மது அலியையே கர்னாடகத்துக்குப் போட்டியின்றி நவாபாக்கினார்கள். பிரெஞ்சியரின் எண்ணமும், டியூப்ளேயின் முயற்சியும் வீணாயின. பிரெஞ்சுக்காரின் பலம் குன்றினதால் சென்னையின் வியாபாரம் அதிகப்பட்டது. டியூப்ளேயும் தன் காரியம் நிறைவேறாது, பிரான்ஸ் தேசத்துக்கு விசனத்துடன் திரும்பினான்.



கலஸமஹால்

சிலவாண்டுகளானபின் ஐரோப்பாவில் மறுபடியும் ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் யுத்தம் ஏற்பட்டது. ஒரு பெரிய பிரெஞ்சிய படை இந்தியாவுக்கு வந்தது. அதற்குத் தலைவனான லாலி என்பவன், ஆங்கிலேயரை வேருடன் களைந்துவிடவேண்டுமென்று வீண் ஆசைகொண்டு, முதலில் ஸெயின்ட் டேவிட் கோட்டையைத் தாக்கி, அதைக் கைக்கொண்டு இடித்துத் தள்ளினான். பிறகு இரண்டு மாத காலம் (1758—1759) சென்னைக் கோட்டையை முற்றுகை செய்தான்; இந்தியர் பட்டணத்தைக் கொள்ளையிட்டான். பிறகு ஆங்கிலேய கப்பற்படை ஒன்று சென்னைக்கு வரவே, லாலி முற்றுகையை விட்டுவிட்டுப் பின்வாங்கினான். அவனைத் துரத்தி ஆங்கிலேயர்கள் சென்றார்கள். வந்தவாசியில் அவனை முறியடித்தார்கள். பிறகு புதுச்சேரியை முற்றுகையிட்டு அதையும் பிடித்துக்கொண்டார்கள்; அதன் கோட்டை மதில்களையும் தளங்களையும் தகர்த்து நிலமட்டமாக்கினார்கள் (1761 கி. பி.). இதுமுதல் பிரெஞ்சியருடைய போட்டியில்லாமல் ஆங்கிலேயரே தென்னிந்தியாவில் தலைமைவகித்து விளங்கினார்கள்.

### அத்தியாயம் XI


## சென்னையின் சரித்திரம்

மகம்மது அலி நவாப் நாளாவட்டத்தில் ஆங்கிலேயருக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டியதாயிருந்தது. அவனுடைய படைகளுக்கு ஒழுங்கான யுத்தப்பயிற்சி கிடையாது. ஆங்கி

லேய படைகளே மேல்நாட்டுப் போர்முறை யில் தேர்ந்திருந்தனர். ஆங்கிலேயரின் உதவி யைக்கொண்டுதான் நவாபும் தன் விரோதிகளை யொடுக்கினுன். த்தான் இப்படிப் பெற்ற உதவிக் காக, சென்னையைச் சூழ்ந்துள்ள செங்கல்பட்டு ஜில்லாவின் பெரும்பாகத்தையும் அவர்களுக்கு மானியமாகக் கொடுத்தான். இந்த ஜில்லா வுக்கு அதனுல் ஜாகீர் மாகாணம் என்று பெயர் வழங்கலாயிற்று.

நவாபும் சென்னையிலேயே தன் வாழ் நாளைக் கழித்தான்; இங்கு தனக்கென்று ஒரு பெரிய அரண்மனையையும் கட்டிக்கொண்டான். தனது அரண்மனையை முதலில் கோட்டைக் குள்ளே கட்டிக்கொள்ள எண்ணினுன். கோட் டையில் எத்தெருவில் அரண்மனையைக் கட் டிக்கொள்ள நிச்சயித்தானே அத்தெருவுக்கு அரண்மனை வீதி (Palace Street) என்ற பெயர் வழங்கலாயிற்று. கடைசியில் கூவம் நதியின் முகத்துவாரத்துக்குத் தெற்கே கடலோரமாய் சேப்பாக்கத்தில், நவாப் ஒரு பெரிய அரண் மனையையும் அதைச்சுற்றி சிங்காரத் தோட்டங் களையும் மண்டபங்களையும் ஏற்படுத்திக்கொண் டான். இவ்வரண்மனையில் இரண்டு பெரிய கொலுமண்டபங்கள் அமைக்கப்பட்டன. இதற் குத் தற்காலம் கலச மஹால் என்ற பெயர் வழங்கிவருகிறது. சுற்றிலுமிருந்த தோட்டங் களை இப்பொழுது பலவாருக உபயோகப் படுத்துகிருர்கள்.

நவாபின் மாளிகைக்கு மேற்கே, கூவம் நதி யோரமாகக் கவர்னர் வசிப்பதற்கென்று ஒரு மாளிகை யேற்பட்டது. முதலில் கவர்னர்



கவர்னர் மாளிகையும் விருந்து கொண்டாடும் மண்டபமும்

கோட்டைக்குள்ளே வசித்தான். பிறகு இக் காலம் ஜெனரல் ஆஸ்பத்திரியிருக்குமிடத்தில் கவர்னர் ஒழிந்த நேரங்களில் காலங்கழிப்பதற்கும், விருந்து முதலிய கொண்டாட்டங்களை நடத்துவதற்கும், ஒரு நந்தவனத்தையும் மாளிகையையும் கட்டினார்கள். இக்கட்டடத்தைப் பிரெஞ்சுக்காரர் சென்னையைக் கைப்பற்றினபோது இடித்துவிட்டார்கள். பிறகு கவர்னர் வசிப்பதற்கென்று பிரத்தியேகமாக மேற்சொல்லப்பட்ட மாளிகை யேற்பட்டது.

ஆங்கிலேயரின் அதிகாரம் நாளுக்குநாள் ஓங்கிவரவே, கவர்னரின் அந்தஸ்தும் ஆடம்பரமும் அதிகரித்தன. அடிக்கடி இம்மாளிகையைப் புதுப்பித்தும் விசாலப்படுத்தியும் வந்தார்கள். கி. பி. 1801-ம் வருஷத்தில் இம்மாளிகைக்கருகில் ஒரு பெரிய விருந்துக்கோண்டாட்ட மண்டபத்தை (Banqueting Hall) க் கட்டினார்கள். இம்மண்டபத்தின் பெரிய கூடத்துக்குப் போகும் படிகள் உயர்ந்து நேர்த்தியாய் அமைந்துள்ளன. இக்கூடத்தில் அனேக ஆங்கிலேய பிரபுக்களின் படங்கள் தொங்கவிடப்பட்டுள்ளன. அவைகளுள் க்ளைவ் பிரபுவின் படத்தையும், மன்ரோ துரையின் படத்தையும், நவாப் மகம்மது அலியின் படத்தையும் நீங்கள் பார்க்கலாம்.

கவர்னர் மாளிகையைச் சுற்றியுள்ள பெரிய தோட்டத்தில் நல்ல பசும்புல்லும் ஈச்சமரங்களும் நன்றாய் வளர்கின்றன. பறங்கிமலையையடுத்த கிண்டியென்னும் கிராமத்தில், கவர்னருக்கு ஒரு பெரிய தோட்டமும் மாளிகையும்

உண்டு. அங்கு கவர்னர் சில நாட்களைக் கழித்து வருவார்.

நவாப் திறமையற்றவனாதலால் ஆங்கிலேயரே அவனுடைய நாடுகளைக் காப்பாற்றவேண்டியதாயிற்று. நாளாவட்டத்தில் மகம்மது அலியின் சந்ததியாரை நவாப் பட்டத்தினின்றும் விலக்கி, தாங்களே கர்னாடகத்தை சுதந்தரப்படுத்திக்கொண்டார்கள். சென்னைக் கோட்டையையும் விசாலப்படுத்தி, மதில்களையும் பலமாய்க் கட்டினார்கள். கோட்டையைச்சுற்றி ஆழமான அகழியைத் தோண்டினார்கள்; வெளிப்புறத்தில் மண்ணினால் திட்டைகள் எழுப்பினார்கள். கோட்டை வடிவத்தில் பாதி எண்கோணத்தை (Half-octagon) ஒத்ததாயிற்று. அதனுள் அனேக புதிய கட்டடங்கள் ஏற்பட்டன.

கோட்டைக்கு வடக்கிலிருந்த பழைய பட்டணத்தையிடித்து, ஒரு பெரிய வெளி (Esplanade) யாக்கினார்கள். இவ்விடத்திலிருந்த குடிகளெல்லோரும் பெத்தநாயக்கன் பேட்டையிலும் முத்தியாலுபேட்டையிலும் குடியேறினார்கள். இவ்விரண்டு ஊர்களுக்கும் கரும்பட்டணம் என்ற பெயர் வழங்கலாயிற்று. நமது சக்ரவர்த்தியாகிய ஜார்ஜ் மன்னர் இளவரசராயிருந்தபொழுது சென்னைக்கு வந்தார். அப்பொழுது கரும்பட்டணம் என்ற பெயரை மாற்றி ஜார்ஜ் டவுன் என்று சக்ரவர்த்தியின் ஞாபகார்த்தமாகப் பெயர் கொடுத்தார்கள்.

பட்டணத்திலுள்ள வீடுகள் கோட்டைக்குச் சற்றுதூரம் விலகியே கட்டப்பட்டன. இதனால் கோட்டையின் வடபுறத்திலும், மேற்கிலும் விசாலமான மைதானங்கள் ஏற்பட்டன.



சர் தாமஸ் மன்ரோ பிரபு (பக்கம் 67)

கரும்பட்டணத்துக்கு முதலில் நல்ல பாது காப்பில்லை. 18-ம் நூற்றுண்டின் பிற்பகுதியில் மைசூர் மன்னனுகிய ஹைதர் அலி கர்னுடகத்தை அடிக்கடி கொள்ளையிட்டு ஒருகால் சென்னையையும் அணுகினுன். ஆங்கிலேயரும் அவனுடன் சமாதானம் செய்துகொண்டனர் (கி. பி. 1769).

இதன்பிறகுதான் கரும்பட்டணத்தின் பாது காப்புக்காக ஒரு உறுதியான மதிலையெழுப்பலானுர்கள். இம்மதில் சுமார் மூன்றரை மைல் நீண்டு, பட்டணத்துக்கு வடக்கிலும் மேற்கிலும் ஒரு காப்பாக இருந்தது. இதில் அனேக கொத்தளங்களும் அமைந்திருந்தன. இப்பொழுதுள்ள ஒற்றைவாடைத் தெருவின் பக்கமாய் மேற்கு மதில் இருந்தது. அதை எண்பது வருஷங்களுக்குமுன்னே யிடித்துவிட்டார்கள். இராயபுரம் ஆஸ்பத்திரியைச் சேர்ந்தாற்போலுள்ள பெரியபழைய சுவர் வடக்கு மதிலின் ஒரு பாகமே. இம்மதிற்சுவர் பட்டணம் விசாலிப்பதற்கு இடையூருகவே யிருந்ததால், பிற்காலத்தில் இதை யிடித்துவிடவேண்டியது அவசியமாயிற்று.

ஹைதரும் அவனுடைய மகனுகிய திப்பு சுல்தானும் ஆங்கிலேயருடன் அடிக்கடி போர் புரிந்தனர். மகம்மது அலி நவாபின் பொருட்டே இப்போர்கள் பெரும்பாலும் உற்பத்தியாயின. நவாபும் பணத்தை வரம்பின்றிப் பிரயோஜனமற்ற காரியங்களில் செலவிட்டு, சீக்கிரத்தில் கடன்காரனுனுன். பெரிய ஆங்கிலேய உத்தியோகஸ்தர்களும் மற்றவரும் அவனுக்குக் கடன்கொடுத்து, திரும்பி அதிகமாகப்

பணத்தை வசூலித்தார்கள். தஞ்சாவூரையாண்டு வந்த மஹாராஷ்டிர மன்னனை, ஆங்கிலேயர் நவாபின் தூண்டுகோலினால் தாக்கினார்கள். சிறிது காலம் அரசனை விலக்கிவைத்து, தஞ்சாவூர் ராஜ்யத்தைத் தாங்களே ஆண்டனர். பிற்பாடு அந்த ராஜ்யத்தையே ஸ்திரமாக தங்களுடைய நாடுகளுடன் சேர்த்துக்கொண்டனர்.

முறை தவறி நடந்து அநியாயமாகப் பொருளீட்டின சில ஆங்கில உத்தியோகஸ்தர்களை, அப்பொழுது கவர்னராயிருந்த பிகட்பிரபு (Lord Pigot) அடக்கிச் சீர்திருத்த முயன்றார். அவருக்கு மாறாக ஆங்கிலேயர் சிலர் சேர்ந்து, சூழ்ச்சி செய்து அவரைச் சிறையிலடைத்தார்கள். இப்படி அரசாங்கம் சீர்குலைந்திருந்த சமயத்தில் ஹைதர் அலி ஆங்கிலேயருடன் சண்டையிட்டு, பிரெஞ்சுக்காரரின் உதவியைக்கொண்டு, திடீரென்று கர்னாடகத்துள் பிரவேசித்தான். அவனுடைய படைகள் சென்னையை யணுகிச் சுற்றிலுமுள்ள கிராமங்களைக் கொள்ளையடித்துத் தீக்கிரையாக்கினார்கள். ஒரு ஆங்கிலேய படையையும் காஞ்சீபுரத்துக் கருகில் முற்றிலும் முறியடித்தார்கள். சென்னைவாசிகளும் தங்களுடைய கதி என்னவாகுமோவென்று பயந்தார்கள். பிறகு கல்கத்தாவினின்றும் கூட் என்ற தளகர்த்தன் வந்து, ஹைதரை யெதிர்த்து முறியடித்து, அவனைப் பின்வாங்கச் செய்தான். ஹைதர் இந்த யுத்தம் நடந்துகொண்டிருந்த காலத்திலே யிறந்தான். அவனுடைய மகன் திப்புசுல்தானும் ஆங்கிலேயரும் சற்றுகாலம் போர் புரிந்து சமாதானம் செய்துகொண்டார்கள்.

இச்சண்டை நடந்த காலத்தில் சென்னை வாசிகளுக்கு அனேக கஷ்டங்கள் ஏற்பட்டன. ஹைதரின் கொடுமையைப் பொறுக்காது பட்டணத்துக்குள் அனேகர் வந்து குடியேறினார்கள். விளைபொருள்கள் பயிர் செய்யப்படாததினால் சாமான்களின் விலை அதிகரித்தது. வங்காளத்தினின்றும் கப்பல் மூலமாய் அரிசியைத் தருவிக்க வேண்டியிருந்தது. கி. பி. 1782-ம் வருஷத்தில் ஓரிரவு புயல் காற்று மிகவும் பலமாய் வீசிற்று. அதனால் கரையில் பல கப்பல்கள் மோதுண்டு உடைந்துபோயின. ஆறு மாதகாலம் நகர வாசிகள் உண்பதற்குப் போதுமான தானிய வகைகள் வீணாயின. பஞ்சத்தால் அனேக ஜனங்கள் மடிந்தார்கள். இத்தகைய கொடும் பஞ்சம் சென்னையில் எக்காலத்திலும் நிகழ்ந்ததில்லை.

கி. பி. 1790-ம் வருஷத்தில் திப்புசுல்தானுக்கும் ஆங்கிலேயருக்கும் மறுபடியும் போர் உண்டாயிற்று. இந்தியாவிலுள்ள ஆங்கிலேயரெல்லோருக்கும் மேலதிகாரியான கவர்னர் ஜெனரல் (கார்ன்வாலிஸ் பிரபு) தாமே நேரில் சென்னைக்கு வந்து சேனைத்தலைமை வகித்தார். மைசூரின்மீது படையெடுத்துச் சென்று, அங்குள்ள பங்களூர் கோட்டையைக் கைப்பற்றி, திப்புவின் தலைநகராகிய ஸ்ரீரங்கப்பட்டணத்தை எதிர்த்துச் சென்றார். திப்புவும் பயந்து சமாதானத்துக்கிசையும்படி ஆங்கிலேயரை வேண்டிக்கொண்டான். இருகட்சியாரும் செய்த உடன்படிக்கையின்படி திப்பு பெரும் பணத்தொகையையும், நாட்டில் பாதி பாகத்தையும், தன் புத்திரர் இருவரைத் தன்னுடைய நன்னடத்தைக்குப்

பிணையாகவும் கொடுத்தான். இப்படி வெற்றி பெற்ற கார்ன்வாலிஸ் பிரபுவைப் பெருமைப் படுத்தும்பொருட்டு, சென்னைவாசிகள் அவரைப்போல் உருவச் சிலையொன்றைச் சலவைக் கல்லாற் செய்தனர். அவ்வுருவச் சிலையின் பீடத்தில் திப்புவின் இரண்டு பிள்ளைகளையும் இப் பிரபு வரவேற்பதுபோல் சித்திரம் செதுக்கியிருக்கிறார்கள். அச்சிலையை முதலில் கோட்டையில் நாட்டியிருந்தார்கள். தற்காலம் பொருட் காட்சி சாலையிலுள்ள புத்தகாலயத்தில் (Connemara Library) அது அமைக்கப்பட்டுள்ளது.

இன்னமொரு முறை திப்பு ஆங்கிலேயருடன் போரிட்டான். ஆங்கிலேயரும் அவன் மீது படையெடுத்து, அவனுடைய தலைநகரத்தைப் பிடித்துக்கொண்டார்கள். திப்புவும் போர்க்களத்தில் மாண்டான் (1799 கி. பி.).

மைசூரில் பழைய அரச வம்சத்தைச் சேர்ந்த ஒரு சிறுவனை ஆங்கிலேயர் தேர்ந்தெடுத்து அவனையே மைசூர் மஹாராஜாவாக நியமித்தார்கள். அச்சிறுவன் சந்ததியாரே தற்காலமும் மைசூரை யாண்டுவருகின்றனர்.

ஆங்கிலேயர் இப்படி யடைந்த வெற்றியைக் கொண்டாடும் பொருட்டே, கவர்னர் மாளிகைக் கருகிலுள்ள விருந்து மண்டபத்தைக் கட்டினர்கள். இப் போர் முடிந்தபின், பகைவர் பயமின்றி, தென்னிந்தியா முழுவதிலும் ஆங்கிலேயரே ஏகாதிபத்யம் செலுத்துவராயினர். ஆகையால் சென்னை நகரத்திலும் அதைச் சேர்ந்த ஜில்லாக்களிலும் பலவித சீர்திருத்தங்கள் செய்ய ஆங்கிலேயருக்கு அவகாசமிருந்தது.

இப்படி அரசாங்க முறையைச் சீர் திருத்தின வர்களுள் மன்ரோ பிரபுவே முக்கியமானவர். இவர் 1820-ம் வருஷம் கவர்னர் பதவியை யடைந்து ஏழு வருஷகாலம் சென்னையை யாண்டார். இவர் இளமைப் பருவத்திலேயே தென்னிந்தியாவுக்கு வந்தார். பல ஜில்லாக்களில் கலெக்டர் உத்தியோகம் வகித்து, பயிரிடும் குடிகளுக்கு அனேக நன்மைகளைச் செய்தார். அவர்கள் செலுத்தவேண்டிய வரிகளைத் திட்டப்படுத்தினர். நியாயஸ்தலங்களையும் போலீஸ் படைகளையும் ஒழுங்குபடுத்தினர். இந்தியர்கள் ஆங்கிலேய பாஷையைக் கற்றுக்கொள்ளப் பள்ளிக்கூடங்களை யேற்படுத்தினர். ஜனங்களும் அவரிடம் பேரன்பு பாராட்டி அவரைக் கௌரவப் படுத்தினர்கள். அவர் பிரேதத்தைக் கோட்டையிலுள்ள கிறிஸ்தவக் கோயிலில் அடக்கஞ் செய்வித்திருக்கிறார்கள். அவருடைய கம்பீரமான உருவச் சிலையை நீங்கள் பார்த்திருப்பீர்கள். அவர் சீர்ப்படுத்தின துரைத்தன முறையே தற்காலமும் பெரும்பாலும் நடைபெறுகிறது.

அத்தியாயம் XII

## நகரத்தின் அரசாங்க முறையும் நகரபரிபாலன சபையும்

நமது ராஜதானியிலுள்ள மற்ற ஜில்லாக்களைப்போல் சென்னை நகரமும் ஒரு ஜில்லாவாகும். சென்னையில் கலெக்டர் முதலிய மேலதிகாரிகள் உண்டு. கலெக்டர் மற்ற ஜில்லா கலெக்டர்களைப்போல் நிலவரி வசூல் செய்கிறார். சில

வருஷங்களுக்கு முன் துறைமுகத்தில் ஏற்றுமதி இறக்குமதி செய்யப்படும் சரக்குகளின் மேல் விதித்த வரிகளையும் அவ்வதிகாரியே வசூல் செய்துவந்தார். தற்காலம் இதற்கென்று வேறொரு உயர்தர உத்தியோகஸ்தர் நியமிக்கப் பட்டுள்ளார். நகரவாசிகளின்றும் வருமான வரி (Income-tax) யை வசூல்செய்யப் பிரத்தியேகமாக ஒரு இலகா ஏற்பட்டிருக்கிறது. நகர பரிபாலனச் சபையார் வீட்டுவரி, வண்டிவரி, தொழில் வரி முதலியவற்றை வசூல் செய்துகொண்டு வருகிறார்கள். இப்படிப் பலவேறு அதிகார்ரிகள் சென்னையில் பலவிதமான வரிகளை வாங்குகின்றனர்.

நமது நகரத்தில் அனேக நியாயஸ்தலங்கள் உள்ளன. அவை ஸிவில் கோர்ட்டுகள், கிரிமினல் கோர்ட்டுகள் என்று இரு பிரிவாயுள்ளன. ஸிவில் கோர்ட்டுகளில் கடனை வசூலித்தல், பொருள் சம்பந்தமான மற்ற வழக்குகளில் தீர்ப்புச் செய்தல் முதலிய காரியங்கள் நடைபெறுகின்றன. கிரிமினல் கோர்ட்டுகளில் சண்டை சச்சரவு, கொலை, களவு முதலிய குற்றங்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளை விசாரித்து, குற்றவாளிகளுக்குத் தண்டனை விதிக்கிறார்கள்.

நகரத்தில் உண்டாகும் ஸிவில் வியவகாரங்களுக்காக, ஸ்மால்காஸ் கோர்ட்டுகள், ஸிடி ஸிவில்கோர்ட்டு, என்ற இரண்டு நியாயஸ்தலங்கள் உள்ளன. பெரிய வழக்குகளை உயர்தரக் கோர்ட்டாகிய ஹைகோர்ட்டிலே விசாரிப்பார்கள். கிரிமினல் வழக்குகளுக்காகப் பிரெஸிடென்ஸி மாஜிஸ்டிரேட் கோர்ட்டுகள் எழும்பூரிலும், பட்டணத்திலும் உள்ளன. ஒவ்வொரு

கோர்ட்டிலும் இரண்டு நியாயாதிபதிகள் வழக்கு களை விசாரித்து வருகிறார்கள். சம்பளம் பெறாது கௌரவத்துக்காகவே வேலை செய்யும் மாஜிஸ்டிரேட்டுகள் (Honorary Magistrates) பலர் நியமிக்கப்பட்டுள்ளார்கள். இவர்கள் வாரந்தோறும் இரண்டு முறை நகரத்தில் பல விடங்களில் அற்ப குற்றங்களை விசாரித்து தீர்ப்பு சொல்லுகிறார்கள். இம்மாதிரி கிரிமினல் கோர்ட்டுகளில் தண்டிக்கப்படுவோர்கள் உயர்தர நியாயஸ்தலமாகிய ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்து கொள்ளலாம். மூன்று மாதங்களுக்கொரு முறை ஹைகோர்ட்டில் ஸெஷ்ஷன்ஸ் விசாரணை நடைபெறும். இதில் பெருங் குற்றவாளிகளை விசாரித்து அவர்களுக்குத் தகுந்த தண்டனை விதிப்பார்கள்.

ஹைகோர்ட்டு சென்னை ராஜதானியிலுள்ள ஜில்லாக்களுக்கெல்லாம் உயர்தர நியாயஸ்தலம். மற்ற ஜில்லாக்களினின்றும் வழக்குகள் இக்கோர்ட்டுக்கு அப்பீலில் கொண்டுவரப்படுகின்றன. இக்கோர்ட்டில் 14 உயர்தர நியாயாதிபதிகள் (Judges) வேலைபார்த்து வருகிறார்கள். இவர்களுள் முதல்வர் சீப் ஜஸ்டிஸ் எனப்படுவார். இவரே கவர்னர் பிரபுவுக்கடுத்த கீழ்ப் பதவி பெற்றவர். ஹைகோர்ட்டினின்றும் இங்கிலாந்திலுள்ள ராஜசபை (Privy Council) க்கு வழக்குகளை அப்பீலில் எடுத்துக்கொண்டு போகலாம். சென்னையில் சுமார் ஆயிரம் வக்கீல்களுக்கு மேல் உள்ளார்கள். இவர்கள் அட்வோகேட் என்ற பட்டம் வகித்துள்ளார். இவர்களே இக்கோர்ட்டுகளில் வழக்குகளை யெடுத்து விவரித்துத் தங்கள் கட்சிக்காரர்கள் பக்கமாய் வாதாடுவார்கள்.

ஹைகோர்ட்டு கட்டடத்திலேயே ஸிவில் கோர்ட்டுகளும் உள்ளன.

நகரத்தின் பாதுகாப்புக்காக ஒரு பெரிய போலீஸ் படையுள்ளது. முற்காலத்தில் பெத்த நாயக்கன் என்னும் தலைவன் தானே பல சேவகர்களை நியமித்துப் பட்டணத்தைக் காத்துவந்தான். தற்காலம் போலீஸ் சேவகர்களெல்லோருக்கும் கமிஷனர் என்ற மேலதிகாரி ஒருவர் இருக்கிறார். அவர் கீழ் இன்ஸ்பெக்டர், ஸார்ஜென்ட், ஹெட்கான்ஸ்டபில் முதலிய சேவகர்கள் பலர் உள்ளார்கள். போலீஸ் படை பலவாயிரம் பெயர்கள் அடங்கியது. அவர்களுள் ஒரு சாரார் ஜனங்களுக்குள் சச்சரவு, கலகம், அடிதடி முதலியவை உண்டாகாதபடி பாதுகாத்தும், அவைகள் நேரிட்டால் அடக்கியும் வருகிறார்கள்; திருட்டு, கொலை, சூதாடல் முதலிய குற்றங்கள் நடந்தால் குற்றவாளிகளைக் கண்டுபிடித்து நியாயஸ்தலங்களுக்குக் கொண்டு வருகிறார்கள். மற்றொரு சாரார் போக்குவரவு அதிகமாயுள்ள தெருக்களில் நின்றுகொண்டு வண்டிகள் ஒன்றோடொன்று மோதாமலும் ஜனங்கள்மீது ஏறாமலும் செல்லுமாறு ஏற்பாடு செய்கிறார்கள். வீதிகளில் போகும் வண்டிகள் ஒரு பக்கமாய்ச் செல்லவும் வரும் வண்டிகள் மற்றப் புறமாய் வரவும் ஏற்பாடு செய்கிறார்கள். நாம் ஒரு வண்டியில் ஏறிச்சென்றால், அவ்வண்டி ரஸ்தாவின் இடப்புறமாகவே செல்வதைப் பார்க்கிறோம். இப்படி எல்லா வண்டிகளும் ரஸ்தாக்களில் இடப்புறமாகச் செல்லுவதே, வீதிகளில் செல்லும்போது அனுசரிக்கப்படும் பெரிய விதியாகும். வண்டிகளெல்லாம்

இவ்விதியை யனுசரிக்கும்படி போலீஸார் செய்வதை நீங்கள் பார்த்திருக்கலாம். எந்த வண்டிக்காரனும் இவ்விதியை மீறிநடந்தால் அபராதத்துக்குள்ளாவான். வீதிகள் சந்திக்குமிடங்களில் போலீஸார் ஜனங்களுக்கு அபாயம் வராமலிருக்கும்பொருட்டுக் கைகளாலும், இரவில் பச்சை விளக்கு, சிகப்பு விளக்குகளாலும் சமிக்கை செய்து வண்டிகளை நிறுத்துவதையும் போகச் செய்வதையும் நீங்கள் பார்த்திருப்பீர்கள்.

நமது நகரம் ராஜதானிக்கெல்லாம் தலைநகராயிருப்பதால் இங்குதான் அரசாங்கத் தலைவரான கவர்னரும், அவருக்குதவிபுரியும் கௌன்ஸில் மெம்பர்களும் (Executive Council), மந்திரிகளும் (Ministers) வசித்துவருகிறார்கள். இப்படி அரசாங்கக்காரியங்களைப் பல இலாகாக்களாகப் பிரித்திருக்கிறார்கள். கௌன்ஸில் மெம்பர்கள் நால்வர்; இவர்களுள் இருவர் ஐரோப்பியரும் இருவர் இந்தியருமாவர். இவர்கள், வரி வசூல், நியாய விசாரணை, போலீஸ் முதலிய இலாகாக்களை மேற்பார்வையிடுகிறார்கள். மந்திரிகள் மூவர்; இம்மூவரும் அரசாங்க முறைமைக்காக சட்டதிட்டங்கள் செய்யும் சபை (Legislative Council) யின் அங்கத்தினரினின்றும் தேர்ந்தெடுக்கப்படுவர். வைத்தியசாலைகள், கல்விஇலாகா, முனிஸிபாலிடிகள், லோகல் போர்டுகள் முதலிய அங்கங்களை நடத்திவருகிறார்கள். சட்டசபைக் கட்டடம் கோட்டையின் கிழக்குப் பாகத்திலுள்ளது. இதன் அங்கத்தினர் பெரும்பாலும் ராஜதானியின் பலவேறு ஜில்லாக்களிலுள்ள ஜனங்களால் தேர்ந்

தெடுக்கப்படுகின்றனர். இச்சட்ட சபையார் அரசாங்க விஷயங்களைப்பற்றி புதுச்சட்டங்களை யேற்படுத்தியும் அரசாங்க இலாகாக்கள் சரியாய் நடைபெற்று வருகின்றனவா என்று வினவியும் வருகின்றனர். கௌன்ஸில் மெம்பர்களும் மந்திரிகளும் இச்சபையின் அங்கத்தினராய், தங்களுக்குரிய விஷயங்களைச் சபையில் எடுத்துப் பேசுவார்கள். இப்படி அரசாங்க முறையில் பொதுஜனப் பிரதிநிதிகள் தேர்ச்சியடைகிறார்கள்.

அரசாங்கக் காரியாலயம் (Government Secretariat) அனேக பிரிவுகளுடையது. ஒவ்வொரு முக்கிய இலாகாவுக்கும் காரியதரிசியும், உப காரியதரிசிகளும் உள்ளார்கள். இவர்களே அரசாங்கத்தாரின் கட்டளைகளைப் பிரசுரித்து நிறைவேற்றுவார்கள். ராஜதானியின் அரசாங்கத்தைச்சேர்ந்த வரி ஆபீஸ் (Board of Revenue), கல்வித் தலைமை ஆபீஸ் (Office of the Director of Public Instruction) முதலிய பல இலாகாக்களின் தலைமை ஆபீஸுகளும் சென்னையிலேயே உள்ளன. சென்னையில் ஒரு பெரிய சர்வகலாசாலை (University) யும், பல உயர்தரக் கல்லூரிகளும், வைத்தியம், சட்டம், என்ஜினீரிங் சாஸ்திரம் முதலியன கற்பிக்கும் சாலைகளும், பெண்கல்விக்கென் றேற்பட்ட உயர்தரக் கல்லூரிகளும் பலவுள்ளன. இவைதவிர பிரதம போஸ்டு ஆபீஸ், பிரதம தந்தி ஆபீஸ் முதலியனவும் சென்னையிலேயே ஏற்பட்டுள்ளன.

நகரபரிபாலன சபையைப்பற்றி நீங்கள் படித்திருக்கிறீர்கள். இச்சபையில் ஐம்பது அங்கத்தினர் உள்ளார்கள். நகரம் முப்பது பிரிவு

களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பிரிவும் மூன்று வருஷங்களுக்கொருமுறை ஒரு அங்கத்தினரைத் தேர்ந்தெடுக்கும். முனிஸிபாலிடிக்குத் தொழில் வரி, வீட்டு வரி கொடுக்கும் குடிகளே இவ்வங்கத்தினரைத் தேர்ந்தெடுக்கலாம். மீதியான இருபது அங்கத்தினருள் சிலரை, வியாபார சம்பந்தமுள்ள சில பொதுச் சங்கங்கள் தேர்ந்தெடுக்கும்; சிலரை அரசாங்கத்தாரே நியமிப்பார்கள். இவர்கள் சம்பளமின்றி உழைத்துவருகிறார்கள். நகரபரிபாலன சபை அடிக்கடி கூடி காரியங்களை நடத்தும். வருஷத்துக்கொருமுறை, தங்களுக்குள் ஒரு தலைவரை (President) த் தெரிந்தெடுப்பார்கள்.

நகரபரிபாலனத்துக்குக் காரியகர்த்தாவாகக் கமிஷனர் என்னுமோர் அதிகாரியிருக்கிறார். இவ்வதிகாரியை அரசாங்கத்தார் நியமிக்கிறார்கள். இவரே நகரபரிபாலன சபையார் நியமனஞ்செய்யும் காரியங்களை நடத்துவார். இவருக்கு உதவிசெய்யும் அதிகாரிகள் பலருண்டு. ஒவ்வொருவரும் ஒவ்வொரு இலாகாவைச் சேர்ந்த காரியங்களை நடத்துவார்.

நகர பரிபாலனத்துக்குரிய காரியங்கள் பலவுள்ளன. அவைகளுள் முக்கியமானவை: (1) குடி தண்ணீர் கிடைக்கச் சௌகரியம் செய்தல்; (2) சாக்கடைகள் ஏற்படுத்துதல்; (3) வீதிகளிலும் மற்றப் பொதுவிடங்களிலும் விளக்கேற்றுதல்; (4) குப்பை அகற்றல்; (5) ஜனங்களின் ஆரோக்கிய விருத்தி; (6) குழந்தைகளுக்குப் பள்ளிச்சாலைகளை நடாத்துதல்; (7) தெருக்களைச் செப்பனிடுதல் முதலியனவாம்.

சென்னை ஜனங்களுக்குக் குடிநீர் நகரத்துக்குச் சில மைல் தூரத்திலுள்ள புழலேரியினின்றும் குழாய்கள் வழியாகக் கொண்டுவரப்படுகிறது. இந்நீரை வடிகட்டி, அசுத்தங்களை நீக்கி வீடுகள்தோறும் குழாய்கள் மூலமாய்ச் செலுத்தப்பல ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள். கீழ்ப்பாக்கத்தில் இந்நீரை பெரிய குளங்களிற் சேகரித்து வடிகட்ட அனேக ஏற்பாடுகளை யிழைத்துள்ளார்கள். இப்படி நகரத்துக்குக் குடிநீர் குழாய்கள் வழியாய்க் கொண்டுவரப்பட்டு கிட்டத்தட்ட அறுபது வருஷங்களாகின்றன.

சென்னையின் சாக்கடை நீரை முன்னால் கால்வாய்களின் வழியாகச் செலுத்தி தோட்டங்களுக்குப் பாய்ச்சினார்கள். சிலவிடங்களில் கூவம் ஆற்றிலும் கடலிலும் சாக்கடை நீரைப் பாயவிட்டார்கள். இப்பொழுது சாக்கடை நீரைப் பூமிக்குக் கீழே புதைத்த குழாய்களின் வழியாகச் செலுத்தி, வெகுதூரம் கொண்டு போய் அதிலுள்ள அசுத்தங்களை யெடுத்து நீரைத் தோட்டங்களுக்குப் பாய்ச்சுகிறார்கள் இப்புதிய ஏற்பாடு ஜனங்களின் ஆரோக்கியத்திற்கு மிகவும் அனுகூலமானது.

நகர பரிபாலன காரியாலயத்தில் (Municipa Office) பல இலாகாக்கள் உள்ளன. ஒன்று வா களை வசூல்செய்தும், மற்றொன்று ரஸ்தா களைச் செப்பனிட்டும், மற்றொன்று முனிஸிப பள்ளிக்கூடங்களை நடத்தியும், மற்றொன் முனிஸிபல் விளக்குகளைக் கவனித்தும், இன் மொன்று ஜனங்களின் தேக சௌக்கியத்து காகப் பாடுபட்டும் வருகின்றன. இவ்விலாகா களின் தலைமை உத்தியோகஸ்தர்கள் கமி

னரின் அதிகாரத்துக்குக் கீழ்ப்படிந்து காரியங்களை நடத்திவருகிறார்கள்.

பிள்ளைகளே! நீங்கள் முக்கியமாய்க் கவனிக்கவேண்டிய விஷயம் ஒன்றுண்டு. உங்களுள் சிலர் முனிஸிபாலிடியார் ஏற்படுத்தியிருக்கிற பள்ளிக்கூடங்களில் படிக்கிறீர்கள். முனிஸிபாலிடி நிர்வாகிக்கும் காரியங்களையறிவீர்கள். நீங்கள் பெரியவர்களாகும்போது முனிஸிபல், அதாவது நகர பரிபாலன சங்கத்தின் அங்கத்தினரைத் தெரிந்தெடுக்கும் சுதந்திரத்தைப் பெறுவீர்கள். உங்களுள் சிலர் அச்சங்கத்தின் அங்கத்தினராகவும் ஆகலாம். நகர பரிபாலன சம்பந்தமான இவ்விஷயங்களையெல்லாம் நீங்கள் சிறு பருவம் முதற்கொண்டே நன்கறிந்துகொண்டு நல்ல குடிகளாகவும், ராஜாங்கத்தாருக்குதவிசெய்யும் பிரஜைகளாகவும் ஆவீர்களாக! நீங்கள் நல்ல குடிகளாவதற்கு இம்மாதிரி உங்கள் நகர சம்பந்தமான விஷயங்களையெல்லாம் தெரிந்துகொண்டு, முறைப்படி நடப்பது மிக்க அவசியமாகும்.

77425

C. L. S. PRESS, MADRAS—1930